# வித்தகி

RAMANATHAN COLLEGE

Returned on 13/08/03
Wednesday
at RL.

## தளிர் - I

உயர்தர மாணவர் மன்றம்

யா / இராமநாதன் கல்லூரி,

மருதனார்மடம். சுன்னாகம்.

2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கல்லூரி அதிபர்



திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்

B.A (HONS) Cey. DIP. In Education

S. L. P. S. I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் கன்னி முயற்சிக்காக வெளிவரும் "வித்தகி" என்ற சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாணவர்களுக்கிடையே வாசிப்புத்திறன் அருகி வரும் நிலையில் இத்தகைய சஞ்சிகையை வெளியிடுவது பாராட்டுவதற்குரியதாகும். மாணவர்களிடம் இலைமறை காயாக மறைந்திருக்கும் எழுத்தாற்றல், திறமை, துணிவு என்பவற்றை வெளிக்கொணர இத்தகைய முயற்சிகள் மிகவும் அவசியமானதாகும்.

சஞ்சிகை வெளியிட முயற்சி செய்யும் போது மாணவர்களின் சுயதிறன் வெளிப்பாடு, ஆளுமை விருத்தி என்பன ஏற்படுகின்றன. நாட்டிற்கேற்ற துணிவுள்ள பொறுப்பேற்கும் மனப்பாண்மையுள்ள பிரஜைகளாக உருவாகுவதற்கு இச் சஞ்சிகை வெளியீடு அடிக்கல்லாக அமைந்துள்ளது.

சஞ்சிகை வெளியிடுவதில் மிகவும் ஆர்வமாக, துடிப்பாக நின்று செயற்பட்ட மாணவிகள் எதிர்காலத்தில் இதே பண்புடையவர்களாக மிளர வேண்டும். மேலும் மேலும் மாணவிகள் தங்கள் திறன்களை வெளிப்படுத்துவதற்காக இத்தகைய சஞ்சிகைகளை வெளியிடுவதற்கு எனது ஆசியினை வழங்குகின்றேன்.

**திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்**
B.A (HONS) Cey. DIP. In Education
S. L. P. S. I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபர்



தனித்தமிழ் நங்கையர்கள் தாம் மட்டும் கற்பதற்காய்
தலைசிறந்த சாலை தனை தனித்துவமாய் உருவாக்கி
விருதியுடன் சமைத்தார் வித்தகர் இராமநாதன்
வியத்தகு இராமநாதன் வித்தியாசாலை தனில்
பெரும்பணியாற்றி வந்த பெரியோர்கள் மத்தியிலே
போற்றுதற்குரியவர்கள் பெருமதிப்புடையவர்கள்
தோற்றிய வழியிலேயே தொடர்ந்த எம் நங்கையர்கள்
ஆற்றல் வெளிப்பாடு அவனிக்கே வேண்டுமென்று
விழித்தெழுந்து சமைத்த "வித்தகி" என்பவள்
வீறுநடை போட்டு வியப்புடன் தோன்றியுள்ளாள்
நயத்தகு வித்தகி அவள் நலம் பெற்று வாழ்ந்து
நாளைவரும் நங்கையர்க்கும் நல்லவழி காட்டி
பார்புகழும் வள்ளலின் நினைவை நனவாக்கி
பற்றுமிக்க மாணவர் பல பேரை உருவாக்கி
தேனருவியாக திசைதோறும் பரவ வேண்டி
வளமாக வாழ வாழ்த்துகிறேன்.

**திருமதி ப. தியாகலிங்கம்**
*பிரதி அதிபர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *wish from our Teacher.*



I have great pleasure in wising the magazine "vitthaki" all success. The members of the advanced level Union have taken immense trouble to publish this issue after a long period.

I sincerely congratulate the students for their untiring efforts to make this issue a successful one and I wish that this tradition should be continued in the future as well.

Mrs. P. Kesavan.
*Teacher of English*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற உபஅதிபரின் வாழ்த்துரை



**வித்தகி நீடித்து நிலைநிற்க...........**

கருதரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடும் கருணாகரக்கடவுள் அருளாட்சி புரிகின்ற இராம நாதன் கல்லூரித் தாய்க்கு இன்று வயது தொண்ணூறு. இக்காலப்பகுதியில் இக்கல்விப் பூங்காவில் பூத்துக் குலுங்கிய மலர்களோ பலநூறு தொண்ணூறு வயதினை பூர்த்தி செய்யும் காலப் பகுதியில் கல்லூரி உயர்தர மன்றத்தினர் "வித்தகி" என்ற மலரை புதுப் பொலிவோடும் நறு மணத்தோடும் உங்கள் கரங்களில் தவழவிட எண்ணியிருப்பதை அறிந்து அகமகிழ்கின்றேன்.

பாடசாலைகளில் இத்தகைய மலர் வெளியீடுகள் மாணவிகளின் அறிவு, திறன், மனப்பாங்கு என்பன விருத்தி அடையவும் பாடப்புலத்துடன் நின்று விடாது பல்துறை சார்ந்த ஆற்றல்களைப் பெறவும் தூண்டுகோளாக அமைகின்றன. மாணவிகளின் சுய ஆற்றல்களின் வெளிப்பாடான அறிவு செறிந்த ஆக்கங்களை தாங்கி இம்மலர் வெளிவருகின்றது. பலதரப்பட்ட கஷ்டங்களின் மத்தியில் தடைகள் பல தாண்டி ஆசிரியர்களினதும், மாணவிகளினதும் பெரு முயற்சியின் பயனாக இம் மலர் மலர்வது பாராட்டுக்குரியதாகும்.

வித்தகி வீறுநடை போட்டு வெகு சிறப்பாக வெளிவர எனது மனமார்ந்த ஆசிகளையும் வாழ்த்துக்களையும் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர்களது பணி மேன்மேலும் நீடித்து நிலைநிற்கவும் கல்லூரித் தாயின் புகழ் ஓங்கவும் எல்லாம் வல்ல கூத்தப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

**திருமதி ப. பத்மநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் வழங்கிய வாழ்த்துரை



மனப்பூர்வமான வாழ்த்துடன்:-

வித்தகி எனும் சஞ்சிகையை முதன் முதலாக இராமநாதன் கல்லூரி க. பொ. த. உயர்தர மாணவர் ஒன்றியம் வெளியிடு வதையிட்டு மிகவும் மகிழ்கிறேன். பெருமை மிகு பாரம்பரியத்தை கொண்ட இராமநாதன் கல்லூரி மீண்டும் தனது பெருமைகளைப் பல துறைகளிலும் பரப்பி வருவது பாராட்டுக்குரியது. கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் கரங்களில் தவழப் போகும் வித்தகி இராமநாதன் கல்லூரியின் வித்தகத் தன்மைகளை உள்ளடக்கியிருக்கும். இன்றைய அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஏனைய ஆசிரியர்கள் அனைவரது கண்டிப்பானதும் அன்பானதும் வழி காட்டலில் பெருமைகள் தொடரும். அதற்கு வித்தகி முன்னுதாரணம். உயர்தர மாணவர் ஒன்றியம் உறுதியுடன் தடம்பதித்து மேலும் இத்தகைய நல் முயற்சிகளை மேற்கொண்டு வலிகாமம் வலயத்திற்கும் பெருமை சேர்க்கும் என உறுதியுடன் காத்திருக்கும்.

**திருமதி றெஜினா இருதயநாதன்**
வலயக் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் மன்றத்தால்
# வெளியிடப்படும் சஞ்சிகைக்கான ஆசியுரை.



யாழ் இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தால் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு ஆசி கூறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்தகைய முயற்சிகள் மாணவர்களின் செயல்த் திறனைத் தூண்டுவன ஆகும். தனியே கல்வியோடு நின்றுவிடாது இத்தகைய செயல்த்திறனை அளிக்கும் முயற்சிகளில் மாணவர்களை தூண்டும் கடமை ஆசிரியப் பெருமக்களுக்கு உண்டு இந்த வகையில் இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினர் ஈடுபடுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

மாணவர்களே இந்த நாட்டின் மகத்தான சொத்துக்கள். கல்வி, ஒழுக்கம், கடவுள் நம்பிக்கை ஆகியவற்றை ஊட்டி மாணவர்களை நல்வழிப்படுத்தி வாழவைக்க வேண்டியவர்கள் பெற்றோர்களும், ஆசிரியர்களுமே ஆவர். அறியாமை நிறைந்த வீடு, அநீதி நிறைந்த உலகு, அவலம் நிறைந்த பள்ளி ஆகிய மூன்றும் மாணவர் சமுதாயத்தை அழிக்கும் படைகளாகும். இத்தகைய தீமைகளை விலக்கி நல்லபடி இவர்களை வாழவைக்க வேண்டிய கடமை எம் அனைவருக்கும் உண்டு. கல்வி என்பது ஒருவனுக்கு வாழ வழி செய்து கொடுப்பதாகும். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற வாக்கிற்கு ஏற்ப மாணவர்கள் நற் கல்வியை பயின்று நற் பிரஜைகளாக வளர வேண்டும். இத்தகைய சிறப்புமிக்க கல்விப் பாரம்பரியத்தைக் கெண்ட இராமநாதன கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் சஞ்சிகைக்கு ஆசி கூறி மாணவர் களின் திறன் மேலும் வளரவும் ஆசி கூறி அமைகின்றேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
சமாதான நீதிபதி.
தலைவர்.
ஸ்ரீ துர்காக்தேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் பார்வையிலிருந்து.......



இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் முதன் முதலாக வெளியிடப்படும் "வித்தகி" எனும் சஞ்சிகை வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. இன்று உலகமே சுருங்கி ஒரு கிராமம் போல காட்சியளிக்கும் இந் நிலையில் தகவல் தொழில்நுட்பத்துறை மூலம் இன்று உலகமே வெகுவாக வளர்ச்சி அடையும் இச்சஞ்சிகையை வெளியிடுவதில் எமது மன்றம் பெருமையடைகிறது.

எமது கல்லூரி நீண்டதொரு இந்துசமயப் பாரம்பரியத்தை கொண்ட பாடசாலை. எமது மன்றமானது முதன்முதலாக "வித்தகி" என்ற ஒரு சிறு சஞ்சிகையை வெளியிடுகின்றது. எதிர்காலத்தில் எமது மன்றமானது பல சஞ்சியை வெளியிட வேண்டுமெனவும் அதற்கான அடித்தளத்தை நாம் இட்டுச் செல்கின்றோம்.

இறுதியாக எமது செயற்பாட்டிற்கு காலத்தின் தேவையை அறிந்து பல ஒத்துழைப்புக்களையும், தந்துதவிய கல்லூரி அதிபர் அவர்களுக்கும், உப அதிபர் அவர்களுக்கும், ஏனைய ஆசிரியர்களுக்கும், எமது மன்றத்தின் இதழாசிரியருக்கும், உப செயலாளருக்கும், ஏனைய அங்கத்தவர்களுக்கும், மாணவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு கல்லூரி வாழ்க்கையிலே நாம் பெற்ற பயன்களை அறுவடை செய்யும் இந்த நேரத்திலே கல்லூரி சமூகத்தினரை வாழ்க என வாழ்த்தி மாணவர் மன்றத்தின் சார்பில் விடை பெறுகின்றேன்.

**மொ. வினோஜினி**
*தலைவர்*

உயர்தர மாணவர் மன்றம்,
யா / இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து .....



இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர்களால் "வித்தகி" எனும் சஞ்சிகையை வித்திடுவதன் மூலம் இவ் ஆண்டில் உங்களுடன் ஒரு கணம் என் உணர்வைப் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடை கின்றேன்.

வித்தகியானது உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு மனம் நிறைந்த பூரிப்பு அடைகின்றேன். நிகழும் அனர்த்தங்களுக்கும் பின் தள்ளும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் எமது மன்றத்தின் "வித்தகி" எனும் சஞ்சிகையை வித்திடுவதில் பெருமை அடைகின்றேன்.

"வித்தகி" எனும் சஞ்சிகையை வித்திட பலவித உதவிகளையும் புரிந்த அதிபர் அவர்களுக்கும், உபஅதிபர் அவர்களுக்கும், ஆசிச் செய்தி தந்துதவியவர்களுக்கும், எம்மை நல்வழிப்படுத்திய பொறுப்பாசிரியர் அவர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் எமது மன்றத் தலைவர், உபசெயலாளர், மன்ற உறுப்பினர்களுக்கும், ஆக்கங்களைத் தந்துதவியவர்களுக்கும், என்னோடு தோள் நின்றுழைத்து இவ்வித்தகி வெளிவர ஒத்துழைத்த என் சக மாணவர்களுக்கும் மனமுவர்ந்த நன்றியை செலுத்துவதில் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வித்தகியை வித்திட்டு எமது மன்றத்தின் வழித்தோன்றல்களுடன் மேலும் தொடர்ந்து வரும் காலங்களில் "வித்தகி" எனும் சஞ்சிகை மேலும் சிறப்பாக வெளிவர வேண்டும் என்ற நம்பிக்கையில் உங்களிடம் இருந்து விடைபெறுகின்றேன்.

உயர்தர மாணவர் மன்றம்,
யா/இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

**ச. அனுஷா**
*இதழாசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் செயற்பாட்டிலிருந்து.....



இராமநாதன் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் முதன்முறையாக வெளியிடப் படும் "வித்தகி" என்னும் சஞ்சிகையை வெளி யிடுவதில் நான் பெருமையடைகின்றேன். இச்சஞ்சிகையின் சிறப்பை நாமே சொல்வது தற்பெருமைக்கு ஒப்பானது. ஆயினும் அது பல சிறந்த விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்றால் மிகையாகாது.

மேலும் இவ் "வித்தகி" வெளிவரக் காரணமான அனைவருக்கும் அதன் சிறப்பு உரித்தாகும். இதற்கு உதவி புரிந்த அதிபர், உதவி அதிபர், ஆசிரியர், பொறுப்பாசிரியர், தலைவர், இதழாசிழரியர், மற்றும் மன்ற உறுப்பினர், மாணவர்கள் அனைவரும் நன்றிக்குரியவர். வித்தகியானது நல்ல முறையில் வெளிவர வேண்டுமென அயராது பாடுபட்ட மாணவிகளின் உழைப்பில் பெற்ற பெரும் செல்வமே இவ்வித்தகியாகும்.

"வித்தகி" என்ற சஞ்சிகையானது ஒரு சிறந்த நூலாக அமைவதுடன் மாணவரின் அறிவாற்றலில் திறமை, சிந்தனை போன்றவற்றை வளர்ப்பதுடன் வழிகாட்டியாகவும் அமைகின்றது. இவ்வாண்டைப் போலவே எதிர்வரும் ஆண்டுகளிலும் "வித்தகி" வெளிவர வேண்டு மென வேண்டி விடை பெறுகின்றேன்.

உயர்தர மாணவர் மன்றம்,
யா / இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

**கு. வித்யா**
*செயலாளர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் மன்ற செயற்குழு
# 2003



**இருப்பவர்கள்:–** (இடமிருந்து வலம்)

திரு க. சத்தியதாசன், திருமதி சி. கிருபாகரன், திருமதி சு. சீனிவாசகம், திருமதி ஆ. சிவஞான சுந்தரம் (அதிபர்), திருமதி ப. தியாகலிங்கம், திரு வை. பாலேந்திரா, திருமதி தி. சிவசோதி, திரு தே. திருமுருகராஜன்.

**நிற்பவர்கள்:–** (இடமிருந்து வலம்)

மொ. வீனோஜினி (தலைவர்), த. குமுதினி (உபசெயலாளர்), கு. வித்யா (செயலாளர்), த. ஜெனனி (பொருளாளர்), இ. சுகிர்தினி (செயற்குழு), பா. வீனோதினி (செயற்குழு), ச. அனுசியா (இதழாசிரியர்), இ. மயூரவதனி (செயற்குழு), வ. இன்பநிதி (உபதலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி ஆசிரியர் குழாம்



# உயர்தர வகுப்பு ஆசிரியர் குழாம்



**இருப்பவர்கள்:–** (இடமிருந்து வலம்)

திரு க. சத்தியதாசன், திரு கா. சாந்திநாதன், திரு ம. கோபாலகிருஷ்ணன், திரு தே திருமுருகராஜா, திருமதி சு. சீனிவாசகம், திருமதி ஆ. சிவஞானசந்தரம் (அதிபர்), திருமதி ப. தியாகலிங்கம் (உபஅதிபர்), திரு வை. பாலேந்திரன், திருமதி க. சிவசோதி, திருமதி நா. சிவராஜன், திருமதி E. R. ஜெபநாயகம், திருமதி திலகவதி பொன் குணரட்ணம்.

**நிற்பவர்கள்:–** (இடமிருந்து வலம்)

திரு வீ. ராம்குமார், திரு பே. புலேந்திரகுமார், திரு செ. சரச்சந்திரன், திருமதி சி. கிருபாகரன், செல்வி நீ. விஜயராசா, திருமதி தே. யோகராஜா, திருமதி உ. சிவகுமார், திருமதி ஆ. கே. ஆனந்தரட்ணம், செல்வி சி. வேலும்மயிலும், திருமதி அ. குகதாசன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2003



**இருப்பவர்கள்:—** (இடமிருந்து வலம்)

பா. வீனோதினி, இ. மயூரவதனி, ப. தட்சனா, த. வஜீரா, வதனமொழி, கஜமதி, ச. மேனகா, நா. சத்தியா, பா. ஜெயகிருஷ்ணா,

**நிற்பவர்கள்:—** (இடமிருந்து வலம்)

மு. பிரகாசினி, சிவரஞ்சினி, பா. சுபாசினி, கு. வித்யா, கு. ஜெயந்தா, ச. கல்யாணி, மொ.வீனோஜினி, ச. அனுஷா, மு. பிரதீபா, வ. சந்துஜா, த. குமுதினி

**சமூகமளிக்காதோர்:—**

கு. வேந்தினி, அ. லஜிதா, இ. சுகிர்தினி, த. ஜெனனி, செ. றதீப்தா, வ. சுலக்சனா, வ. இன்பநிதி, நே. கஜேந்தினி, கு. நிசாந்தி, ம. ஜெகதீஸ்வரி, கு. ஜெயப்பிரியா, த. சிறிகலா, ஸ்ரீ. கஜனி, ப. கல்பனா, லீ. சிவாஜினி, க. ஜானு, சி. ஜசோமலர், வ. அனுசியா, க. கவிதா, ம. தாட்சாஜினி, த. கவிதா, ப. நிகிலா, க. சோபி

# 2004



**இருப்பவர்கள்:—** (இடமிருந்து வலம்)

அ.கஜிதா, சுயாழினி, சு. சிவப்பிரியா, ம. அஜிஸ்ரா, ப. அனோஜா, தி. வீதுஷா, ருயாந்தி, இ. தர்மிலா, செ. மதுராங்கனி, ம. கஸ்தூரி, கி. செந்தூரி, மா. றொசானி, செ. சுதாநிதி, நா. கிருபாநிதி

**நிற்பவர்கள்:—** (2ம் வரிசை இடமிருந்து வலம்)

இ. துளசி, சி. கனுசியா, ம. சுமித்திரா, தி. சுகிர்தா, க. மஞ்சுபாசினி, பா. ரசனா, சி. கவிதா, ப. நிவியா. ச. வாகினி. து. வீஜிதலோஜினி, இ. சுகந்தியா, ரஜிஸ்ரா

**நிற்பவர்கள்:—** (3ம் வரிசை இடமிருந்து வலம்)

அ. நளாயினி, ச. சர்மிலி, வே. நிருபா, ஸ்ரீரோகினி, ஸ்ரீ. ஸ்ரீரங்கநாயகி, க. கௌரி, பு. ரஞ்சிதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2005



**இருப்பவர்கள்:–** (இடமிருந்து வலம்)
செ. சிந்துஜா, தெ. றபேக்கா, அ. கார்த்திகா, வி. தனுரோ, வீமர்சினி, து. றேனுகா, க. றமா, ம. சேர்பீகா, சு. சிவசோதி, அ. ஜீவதா, அ. துஷ்யந்தினி.

**நிற்பவர்கள்:–** (2ம் வரிசை இடமிருந்து வலம்)
ச. தர்சினி, ஐ. சர்மிளா, த.உமா, ச. சண்ஜா, கு. வசந்தவல்லி, நி. மான்மகள், கு. சுவானியா, கவியரசி, செ. ராதிகா, ப. கிருசாந்தி, தர்சினி, கு. பத்மலோஜினி, வி. வீந்துஜா, இ. கோகிலா.

**நிற்பவர்கள்:–** (2ம் வரிசைஇடமிருந்து வலம்)
சி. கஜேந்தினி, ம. மேகலா. சுஜாத்தா, பா. சுபாஜினி, த. பிரதீபா, ம. கௌந்தி, பா. பாலறஞ்சினி, சி. தனுசா, கு. ஜென்சி, இ. அஞ்சலா, ப. நிருபா, மு. பிரசாந்தி, ப. பிரவீனா, இ. சுவனேவி

## மாணவர் ஒன்றுகூடலின் போது
## 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்


அதிபரின் ஆசிச்செய்தி
பிரதியதிபரின் ஆசிச்செய்தி
பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி
இளைப்பாறிய உபஅதிபரின் ஆசிச்செய்தி
கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி
கலாநிதி தங்கம்மாஅப்பாக்குட்டி அவர்களின் ஆசிச்செய்தி
மன்றத்தலைவரின் ஆசிச்செய்தி
மன்றச் செயலாளரின் ஆசிச்செய்தி
இதழ் ஆசிரியரின் ஆசிச்செய்தி

01. சிறுவர் காண விரும்பும் யாழ்ப்பாணம் ---------------------- 01
02. ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே ---------- 03
03. நீங்காத நினைவுகள் ---------------------------------------- 05
04. முடிவிலியான கணிதத்தில் நிறைவைக்கண்ட மாமேதை -- 07
05. கவிதைத் துளி ------------------------------------------------- 11
06. மருத்துவக் குறிப்பு ------------------------------------------ 14
07. மாதவியின் 11 வகை ஆடல்கள் ----------------------------- 19
08. பசுபதம் பற்றிய நன்னூலாரின் கருத்துக்கள் --------------- 21
09. 2002ஆம் ஆண்டு இலங்கை பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சி தொடர்பான கண்ணோட்டம் --------------- 25
10. கணக்கீட்டு நியமம் -9 ------------------------------------------ 28
11. விளையாட்டு துணுக்குகள் ------------------------------------ 34
12. எல்லைப்பயன் கோட்பாட்டாய்வு -------------------------------- 36
13. PASSIVE SMOKING ------------------------------------------ 39
14. வளிமண்டல இயக்கம் ஓர் அடிப்படை விளக்கம் ---------- 40
15. மேந்தலைகள் ----------------------------------------------------- 44
16. இந்துக்களின் பொருளாதாரம் --------------------------------- 53
17. கலித்தொகையின் நாடகப் பண்புகள் ------------------------- 56
18. புறநானூறு கூறும் வேந்தர் வள்ளன்மை ------------------- 59
19. நன்றியுரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் காணவிரும்பும் யாழ்ப்பாணம்

சிறுவர் உரிமைகளை கடைப்பிடிக்கின்ற யாழ்ப்பாணத்தையே இன்றைய சிறுவர்கள் விரும்புகின்றார்கள் சிறுவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கின்ற ஒரு கேந்திர மையமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது.சமூக,கலாச்சாரம்,பண்பாடு,பொருளாதாரம்,குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் யாவற்றையும் கடைப்பிடிக்கும் யாழ்ப்பாணத்தையே சிறுவர் கள் காண விரும்புகின்றனர்.

சிறுவர்கள் உடலாலும்,உள்ளத்தாலும், சமூகவாழ்க்கையாலும் தமது ஆற்றலுக்கேற்றவாறு வளர்ச்சி பெறவும் தமது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிக்கவும் தமக்குத் தேவையான முன்னேற்றத்தைக் கொடுக்கும் யாழ்ப்பாணத்தையே சிறுவாகள் விரும்புகின்றனர்.

குடியுரிமைகள்,சுதந்திரங்கள், குடும்பச்சூழல் பராமரிப்பு,அடிப்படைச் சுகாதாரம், கல்வி ஓய்வு கலாச்சாரம் சிறுவர்களுக்கான விசேட பாதுகாப்பு என்பவற்றை சிறுவர் உரிமைச் செயற்குழு மனிதஉரிமை ஆணைக்குழு உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் யாழ்ப்பாணத்தையே சிறுவர் விரும்புகின்றனர்.

சிறுவர்களின் அடிப்படை உரிமைகளில் கல்வி முக்கிய இடம் பெறுகின்றது. முறையான அடிப்பைடைக் கல்வி இல்லாமையாலும் ,வறுமை ஒழுக்க சீர்கேடுகள் காரணமாக சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர் அதை அறவே இலலாமல் செய்யும் வழிமுறை கொண்ட பிரதேசத்தையே சிறுவர்கள் விரும்புகின்றனர். கல்வியை பொறுத்த வரையில் அனைத்துச் சிறுவர் சிறுமியர்களுக்கும் ஆரம்பக்கல்வி கட்டாயமாகவும் ஆலன செய்தல் வெவ்வேறு வகையான இடநிலைக்கல்வியை ஊக்குவித்தல்,ஆளுமை திறமைகள் ,உடல் உள ஆற்றல்கள் முழுமையாக பரிணமிக்கச் செய்தல் சுதந்திர சமூகத்திலே பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வதற்கு பிள்ளையை தயார் செய்தல் ஆகிய செயற்திட்டங்களை நிறைவேற்றும் சமூகத்தையே சிறுவர் காண்விரும்பும் யாழ்ப்பாணமாக அமைகிறது.

பெண்பிள்ளைககைளை பாவத்தின் சின்மமாகவும் ஆண்பிள்ளைகளை செல்வமாகவும் மதிக்கும் பண்பு அன்று தொட்டு இன்றுவரை நிலவி வருகின்றது ஆண்டவன் படைப்பிலே அனைவரும் சமம். ஆகவே பெண்பிள்ளைகளை ஆண்பிள்ளைகளுக்கு கொடுக்கும் மதிப்புப்போன்று கொடுக்கவேண்டும். பெண்கள் சங்கம் அல்லது மாதர் சங்கம் போன்றவற்றை அமைத்து சிறுவர்களுக்கு ஏற்ற உரிமைகளை பெற்றுக்கொடுக்கும் யாழ்ப்பாணத்தையே சிறுவர் காண விரும்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாகப்பிறந்த ஒவ்வொரு சிறுவர் சிறுமியர்களுக்கும் அவர் களது உயிர்வாழ்க்கை உய்வு என்பவற்றிக்கு முழுஉரிமை உண்டு என்பதையும் அதேபோன்று ஆரோக்கியம் சுகாதாரப்பராமரிப்பு ஆகியவற்றை பெற்றுக்கொள்ளவேணடும். இன்றைய யாழ்ப்பாணத்திலே சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் தமது சேவைகளை ஆற்றி வருகின்றன.சிறுவர்களுக்கான அனைத்து உரிமைகளும் பேணப்படும் இல்லமாக தெல்லிப்பழை துர்க்காதுரந்ததி கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பெண்களுக்குகான இல்லமொன்றை நடாத்திவருகின்றார். மற்றையது கோண்டாவில் பகுதியில் சிறுவர் பராமரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு "தாயகம்" எனப் பெயர் இடப்பட்டு சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஒரு பகுதியில் சிறுவர்கள் சிறந்தமுறையில் பராமரிக்கப்படுகின்றனர் இத்தகையதொரு கைங்கரியங்களை செய்யும் பிரதேசத்தையே சிறுவர் காண விரும்புகின்றனர்

அரசாங்கத்தின் உதவியுடனும் செல்வந்தர்களின் நன்கொடைகளு டனும் ஏழைச் சிறுவர்களினதும் பெற்றோரை இழந்து தமது உயிரைகையால் பிடித்த வண்ணம் உள்ள சிறுவர்களுக்கும் உயிப்பிச்சை கொடுக்கவேண்டும். நோயில் இருந்து சிறுவர்களை மீட்க வைத்தியசாலையை நிறுவவேண்டும் அதற்கு யாழ்ப்பாணத்தையே சிறுவர்கள் விரும்புகின்றன.

யாழ்ப்பாணச் சமுதாயம் மனித மேம்பாடு மனித விழுமியம் போன்ற கல்விகளை பாடசாலைகள் தோறும் சிறுவர்களுக்குப் புகட்டுதல் பிள்ளைகள் தமது உரிமைகளைப் பேண மேலைத்தேச நாடுகளில் நடைபெறும் சிறுவர் உச்சிமாநாட்டில் பங்கு கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நமது நாடு கல்வியில் சிறந்த யாழ்மண் பெரியோர்களின் முன் மாதிரிகளை சிறுவர்களுக்கு கடைப்பிடிக்க வழி அமைத்துக் கொடுத்தல் அறநெறிப் பாடசாலைகள் கலைகலாச்சாரம் பண்பாட்டு மனிதவிழுமிய சிந்தனைகளை சிறுவர்களுக்கு கொடுத்து நல்வழிப்படுத்தும் யாழ்ப்பாணத்தையே சிறுவர் விரும்புகின்றனர்.

சிறுவர்கள் ஆயுத மோதலின் தாக்கத்தினால் தமது உரிமைகளை இழந்து உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி உயிர் வாழ தவிக்கின்றனர் அலையற்ற கடல் போல அமைதியான போராட்டம் அற்ற சமூகத்தையே யாழ்ப்பாணச் சிறுவர்கள் காண விரும்புகின்றனர். இலங்கையில் ஆயுதப் பிணக்கினால் பாதிப்புற்ற பிள்ளைகளின் உரிமைகளை பிரச்சாரம் செய்து முன்னேற்றுதலும் பேணும் சமூக அமைப்பை சிறுவர்கள் விரும்புகின்றனர் ஆயுதப்பிணக்குகளில் எந்தவகையிலும் தள்ளப்பட்டிருக்கும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு அதனை பொறுப்பேற்று நடாத்தும் யாழ்ப்பாணத்தையே காண சிறுவர் விரும்புகின்றனர்.

கு. சுவானியா
2005(A/L) கலைப்பிரிவு
யாழ் / இராமநாதன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவதும் பெண்ணாலே அழிவதும்பெண்ணாலே

"ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்று இயம்பினார். அன்று ஓர் சிந்தனை சிற்பி. இச் சிந்தனையில் பெண்ணின் உயர்ச்சியும் வீழ்ச்சியும் ஓரேமூச்சில் தொனிக்கவில்லை? ஆக்கத்திற்கும் அழிதலுக்கும் உறைவிடமாக்கப்படுகிறாள் பெண். அப்பப்பா! இந்த பெண்தான் எத்தனை எத்தனை திருப்பங்களுக்கு உள்ளக்கப்படுகிறாள். மனிதன் அவளை தன் சிந்தணையின் சிகரத்தில் சிறப்பாக வீற்றிருக்கச் செய்கிறான். அவன் சிந்தனை பலவீனமடையும் பட்சத்தில் அவன் செயல் வெற்றி பெறா வேளையிலே,வெறுப்புத் தட்டும் நிலையில் தன் செயலுக்குத்தானே பாத்திரவாளி என்று உணரும் சிந்தனையை இழந்து தன் தோல்வியை ஒப்புக்கொள்ளத் துணிவிழந்து தன் துணைவியிலேயே குற்றத்தை சுமத்துகிறான். அந்த ஆண்மையற்ற ஆண்மகன். விரக்தி அவனை வேரூன்றும் வேளையிலே சகிப்புத்தன்மையை இழந்து "ஆவதும்பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" என்று பெருமூச்செறிகிறான்.

ஒரு பெண்ணை மனிதன் தன் கற்பனைக் கேற்ப உருவாக்குகின்றானே தவிர ஆண்டவனால் தனக்குத் தரப்பட்ட அகத் துணைவி என்னும் அடிப்படை உண்மையை மறந்துவிடுகிறான். அவள் தாய்மை தாங்க தகுதி பெற்றவள், மனித சமுதாயத்தையே உருவாக்கும் உன்னத பணியில் ஈடுபட வேண்டியவள் என்பதை அவன் உணர்வதில்லை. "துன்பம் தீர்வது பெண்மையினாலடா சூரப்பிள்ளைகள் தாயென்று போற்றுவோம். வலியளிப்பது தாய் முலைப்பாலடா மானம் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள் கலியழிப்பது, பெண்கள் அறமடா ! என்று புரட்சிக்கவி பாரதி பெண்மையைப் பாடி பறைசாற்றினான். இறைவன் பெண்மைக்களித்த மாபெரும் பேறு மகப்பேறு பத்துமாதம் படாதபாடுபட்டு பத்தியம் பார்த்து பக்குவமாகத்தான் உதிரத்தில் பிறந்த குழந்தைக்குத் தன் உதிரத்தையே உண்ண உண்ண தெவிட்டாத உணவாகத் தருகிறாள். தாய். பாசம் என்னும் உணவிலே பண்பு என்னும் பாலையும் அன்பு என்னும் வெல்லத்தையும் சேர்த்துப் பிசைந்து ஊட்டுகிறாள். அன்னை அவளின் அன்பின் அரவணைப்பிலே பாசப் பாசப்பிணைப்பிலே நாளைய சமுதாயத்தையே உருவாக்கும் குழந்தை. தன்னைத்தானே தயாராக்கிக் கொள்கின்றது.

பெண்மையின் தன்மையில் தாய்ப் பண்புமாத்திரம் தங்கிருக்கவில்லை தாய்மை உருவாக பல்வேறு பண்புகள் அவளை இயற்கையாகவே சூழ்ந்துள்ளன. பெண்ணின் தன்மையைப் பல்வேறு அம்சங்களாகப் பிரித்துக் கலைகளும் ஒவியங்களும் கவிதைகளும் காலங்காலமாகப் போற்றிப்புகழ்ந்து வருகின்றன. பெண் என்பவளை அன்போடு நோக்கும் போது அன்னையாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தோடு நோக்கும் போது சகோதரியாகவும் வஞ்சையோடும் பார்க்கும் போது மனைவியாகவும் ஏன் ஆசையோடு பார்க்கும்போது காம வெறியூட்டும் போதைக்கருவியாகவும் வர்ணித்திருக்கிறார்கள்.

பெண்மை பல்வேறாகப் பிரிக்கப்படினும் அவை ஒன்றிற்கொன்று ஈடுகொடுத்து ஒட்டி உறவாடி அவள் ஆக்கும் சமுதாயம் வளமுடன் வளார்ச்சியடைய வேண்டுமென்பதே இயற்கையன்னையின் நியதி. இவ்வாக்க முயற்சியில் பெண் அல்லல்படாமலும் இல்லை. துன்பம், துயர், இன்னல்,இடர்கள் இவையெல்லாம் இவ் வையகம் வாழும் வரை பெண்ணைச்சூழ்ந்து கொண்டேயிருக்கும் சிரஞ்சீவிகளாகும் இவைகளைத் தாண்டிச செயல்படும் போது தடைகளைக் கண்டு சோர்வடையாமல் அத்தடைகளைத் துச்சமென எண்ணி ஊக்கமுடன் செயல்படுவளிடம் ஆக்கமான சீதேவி வழி கேட்டு வந்தடைவாள் என்று வள்ளுவர் ஊக்கப்படுத்துகிறார்.

ஆனால் இவ்விடர்களையும் தடைகளையும் எதிர்த்துப் போராடும் போது சற்றுத் தவறிவிட்டால் ஐயையோ! உலகம் அவளைப் படாதபாடு படுத்துகின்றது. அழிவுக்குக் கால் அவளே என்ற மதியற்ற மடமையான கற்பனை எண்ணங்ளுக்கு அவளை அடிமையாக்கி விடுகின்றது. புராணத்தைப் புரட்டுபவர்கள் தசரதச் சக்கரவர்த்தியின் அழிவுக்குக் கால் கைகேயி என்றும்,மதுரைமாநகரை ஒர் வஞ்சிப்பித்தனுக்காக அழித்தாளே கண்ணகி என்றும், இவைகள் பெண்ணின் அழிவுச் சாதனையின் சின்னங்கள் என அர்த்தமற்ற முறையில் ஆர்ப்பாட்டம் செய்கின்றன.ஆனால் இவர்கள் இவ்வாறு கூறுகையில் தம் அறியாமையையே வெளிப்படுத்துகின்றார்கள் சிலப்பதிகாரத்தை ஆழ்ந்து சிந்திக்கையில் கண்ணகியின் வல்லமையுள்ள கற்பின் தாக்கமே மதுரை அழியக்காரணமாக இருந்ததே தவிர ஒரு குறிப்பிட்ட மனிதனுக்காக கண்ணகி மதுரையை அழிக்கவிலலை. அடுத்ததாக இராம இராவணப் போர் மூண்டு அதற்குப் பலியான பல்லாயிரக் கணக்கான உயிர்கள் குருதி வெள்ளத்தில் மிதக்கக் காரணமே இந்தச் சீதை என்னும் பெண்தான் என்று கூறுகின்றனர். ஆனால் உண்மை எதுவெனில் தீயவர் அழியவும் நல்லவர் நிலைப்பதற்காகவுமே இந்த இராம இராவணப் போர் மூண்டது இத்தகைய உண்மைகளை ஊன்றி உணராமல் இப் புராணக்கதைகளின் கற்பனையில் ஒரு பெண்ணின் நிலையை நிர்ணயிப்பது நியாயமாகுமா?

பெண் என்பது தாய்மை மனுக்குலத்தை ஆக்கும் தாய் அழிக்கவும் காரணகர்த்தா ஆகின்றாளா அல்லது மனிதன் தன் கர்வத்தின் கருவியாகத் தன் அழிவுச் சிந்தனையின் சிலையாக விரக்தியின் விக்கிரமாக அவளைச் சிருஷ்டிக்கிறானா? ஆவதும் பெண்ணால் என்பது உண்மையானால் அழிவதும் பெண்ணால் தானே என்பதும் உண்மைதானா என்பதை நீங்களும் சற்றுச் சிந்தியுங்கள்.

செ. வித்யா

2003 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

திருமதி யோகலட்சுமி இராசரத்தினம் அவர்கள் இராமநாதன் கல்லூரியின் வரலாற்றில் ஒரு தனிஇடம் பெற்ற ஒரு மாணவி , ஆசிரியர் ,உபஅதிபர்,அதிபர், அவர் அன்பும்,பண்பும்,ஆற்றலும் நிறைந்த ஒரு நல்லாசான். தனது சீரிய பண்புகளால் தன்னுடன் பழகியவரது உள்ளங்களில் உன்னத இடம் வகிததவர் "குஞ்சக்கா" என்று பலராலும் அழைக்கப்பட்டவர் குஞ்சக்கா என்றால் தான் பலருக்கும் தெரியும் அன்பு பாசத்துடன் இன்முகம் கொண்டு எல்லோருடனும் பழகியதால் இப்பெயர் அவவிற்கு மிகப் பொருந்தும்.

"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை சடைத்து இவ்வுலகி" என்று வள்ளுவர் வாக்கிற்கமைய இன்று அவர் எங்களை எல்லாம் துயரக்கடலில் ஆழ்த்திவிட்டு இறைபதம் எய்தியுள்ளார். அன்னிய நாடாகிய கனடாவில் புகழுடம்பு எய்தியதால் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி எங்கள் நன்றிக்கடனைச் செலுத்த முடியாது அந்தரிக்கிறோம் அன்னார் பற்றிய நினைவலைகள் மோதியபடி உள்ளன. அன்னாரது அன்பிற்குரிய ஒரு மாணவி சக ஆசிரியை, அவரது நிர்வாகத்தின் கீழ்பணி புரிந்தவருமான யான் எனது குருவிற்கு சமர்ப்பணமாக சில வார்த்தைகளை எடுததியம்பக் கடமைப்பட்டுள்ளேன்.

பல வருடங்களாக இராமநாதன் கல்லூரியில் புவியியல் பொறுப் பாசிரியையாக இருந்துள்ளார். இவரிடம் ஓரிரு தவணைகள் மட்டும் புவி யியல் கற்கும் பாக்கியம் கிடைத்தது. வகுப்புக்கள் நல்ல கலகலப்பான முறையில் நடைபெறும். நேரம் போவதே தெரியாது கற்றல் நடைபெறும் ஒரு நல்லாசானுக்கு தேவையான அம்சங்கள் இருப்பதால் மாணவர்கள் மத்தியில் புவியியல் பாடம் ஒரு விருப்பத்திற்குரிய பாடமாகத் திகழ்ந்தது நான் சென்னை சென்று அங்கு புவியியல் பாடத்தில் சிறப்புப்பட்டம் பெற்று 1954ம் ஆண்டு இராமநாதன் கல்லூரியில் புவியியல் ஆசிரியராக பதவி பெற்றேன். திருமதி N.P. பிள்ளை அவர்கள் அதிபராக இருந்த காலம் அது. இதன் பிற்பாடு எனது குருவும் யானும் இப்பாடததைப் போதித்தோடு இப்பாடம் கற்கும் மாணவர் தொகை அதிகரித்தமையால் இரு வகுப்புக்களாக பிரிக்கப்பட்டு நாம் இருவருமாக A/L வகுப்பில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியைகளாக ஒற்றுமையுடன் கடமை புரிந்ததோடு புவியியல் துறைக்கு ஆணிவேராக அன்னார் திகழ்ந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல துறை வளர்ச்சியிலும் அவற்றின் கண்காணிப்பு இருந்தது. சமயத்துறை,சமூகத்துறை,விஞ்ஞானம், விளையாட்டு, கலை போன்ற பலவற்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்த ஒரு அதிபரும் ஆவர். நிர்வாகத் திறன் மிக்கவர் என்பதால் கல்லூரியின் வளர்ச்சிக்கு இவரின் பங்கு அதிகம்.

இத்தகைய பெருந்தகையார் சில மாதங்கட்கு முன்பு தனது பிறந்த ஊராகிய உரும்பிராய் சென்று அங்கு கல்லூரி பழைய மாணவர் சங்கத்தைக் கூட்டி பழைய மாணவநண்பர்களைச் சந்தித்து குசலம் விசாரித்து அறிவுரைகள் வழங்கி அளவளாவி மகிழ்ச்சியடைந்து பிரியாவிடை கூறித் திரும்பியது குறிப்பிடத்தக்கது, இதேபோல் கொழும்பிலும் பழையமாணவர் சங்கத்தைக் கூட்டுவித்து உரையாடி எங்களையும் மகிழ்வுபடுத்தி தானும் சந்தோஷம் அடைந்து சென்றுள்ளார்.

அவரின் உள்மனம் தான் இனிமேல் எங்களை சந்திக்கமுடியாது காலன் நெருங்கியிருக்கிறான். என்று ஒரு சிந்தனை ஏற்பட்டுள்ளது போலும். "பிறப்பு உண்டேல் இறப்பும் உண்டாம்" என்பது நியதி அவர் நீண்டகாலம் சகலசம்பத்தும்பெற்றுஅநுபவித்து வசதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்துள்ளார், அவரது சிந்தனைகள் எங்கள் உள்ளங்களில் என்றும் திகழும்.

அன்னார் விட்டுச் சென்ற பிள்ளைகள், சகோதரிமற்றும் உறவினர்கட்கு எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஆக்கம்
அங்கையற்கன்னி
சிவப்பிரகாசம் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவிலியானகணிதத்தில் நிறைவைக்கண்ட மாமேதை

தொன்று தொட்டு உலகில் எண்ணுதலுக்கும் கணக்கிற்கும் முக்கியஇடம் அளிக்கப்பட்டது. "எண்ணெழுத்திகழேல்----" "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" முதலிய மூதாதையரின் வாக்குகள் இக்கூற்றுக்குச் சான்றாகும். இக்கூற்றுக்கு சான்றாக வாழ்ந்து காட்டியவரே ஸ்ரீநிவாச ராமானுஜன் ஆவார். ஆம் கணித உலகினுள் பிரவேசிக்கும் எவருமே அறிந்திருக்க வேண்டிய பெரியார் ஆவார். உலகிலேயே "கணிதமாமேதை" என அழைக்கப்பட்ட ஒரே ஒரு கணிதவல்லறிஞர் இவரேயாவார் ஏனெனில் இந்த நூற்றாண்டின் இணையற்ற அறிவாளி எனப்படுபவரும் தனது $E=mc^2$ எனும் சக்திச் சமன்பாட்டால் உலகை கவர்ந்தவருமான "ஐன்ஸ்டீன்" கூட ஒரு விஞ்ஞானி என்றே கூறப்பட்டார்.

இப்படிப்பட்ட கணித மேதையை 1887 ஆம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதி உலகுக்கு அளித்தது தமிழ்நாட்டின் கும்பகோணம் எனும் ஊராகும். இவரது தாய் தந்தையர்கள் கோமளத்தம்மாள், ஸ்ரீ நிவாச அய்யங்காரர் ஆவார்கள். இவர் தனது இளம் வயதிலேயே கணிதத்தில் வல்லுனராக விளங்கினார். உதாரணமாக இவரது நண்பனின் தாயார் இவரை நோக்கி "இரவில் சுடுகாட்டை கடந்து பயணம் செய்யக்கூடாது" என கூறினார். இதற்கு ராமானுஜன் இவ்வாறு பதிலளித்தார். "ஏன் மாமி போகக்கூடாது எல்லோரும் ஒரு நாள் அந்த இடத்துக்கு போய்ச்சேர வேண்டியவர்கள் தானே 'பிறப்பு' எனும் கணக்கிற்கு 'இறப்பு' எனும் தீர்வு இருக்கத்தானே செய்யும். பிறப்பு என்பது நான்கெழுத்து. இறப்பு என்பது நான்கெழுத்து. இந்த நான்கை நான்கால் வகுத்தால் ஈவு ஒன்று தானே வரும்" என்றார்.

இதிலிருந்து இவரது கணிதப்பற்று எவ்வளவு என்பது புலனாகிறது இவர் தனது 13 வயதிலேயே Arithmetic ,Geometry, Trignometry ஆகியவற்றைக் கற்றுத் தேறினார். தன் ஆசிரியர்களினது ஆற்றல்களுக்கு அப்பாற்பட்டு விடை காண முடியாத கணிதவியல் கேள்விகளை கேட்கத் தொடங்கினார். 1904 ஆம் ஆண்டில் கணிதவியலுக்கான கல்லூரிப் பரிசை இராமானுஜனே தட்டிக் கொண்டார். நூறு வீத புள்ளிகள் என்பது அவரது தகைமையை குறைத்து மதிப்பிடுவதாகும் என அவரது ஆசிரியர்கள் கருத்து வெளியிட்டார்கள்.கணிதவியலில் ராமானுஜனுக்கிருந்த பேராற்றலைக் கண்டு ஒவ்வொருவரும் வியந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர் தனது 17வது வயதிலிருந்து தொடர்ந்து 3 தடவை F.A பரீட்சையில் சித்தியடையவில்லை. இருந்தும் 3 முறையும் கணிதத்தில் அவர் பெற்ற புள்ளிகள் 100 ஆகும். 1911ஆம் ஆண்டு இந்தியகணிதச் சங்கத்தின் சஞ்சிகையில் "some properties of beronoullis number" எனும் கட்டுரையை வரைந்தார். இக்கட்டுரை மூலம் அவரது கணிதத் திறமையை முழு இந்தியாவும் அறிந்து கொண்டது.

குறுகிய காலத்தில் இவரின் உடல் பருத்து ஒரு வேலையும் இன்றி மிகுந்த மனச் சஞ்சலத்தடன் இவர் குறிப்புப் புத்தகங்களுடன் அலைந்து திரிந்தார். இவரது இந்த நிலையால் தாயாரின் மனம் வருந்தியது தன் மகனுக்கு ஒரு மனைவியைத் தேடி அதில் வெற்றியும் கண்டார். இல்லற வாழ்வில் அடி எடுத்து வைத்த இராமானுஜனுக்கு அவரது மனைவி ஜானகி உறுதுணையாக இருந்தாள் இந்தத் திருமணம் இராமானுஜரின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்ப்படுத்தியது எனலாம்.

ஒரு சமயம் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியரான G.H Ha rdy என்பவர் மிகக்கடினமான சில கணிதப்புதிர்களை வெளியிட்டு அதற்கு சரியான பதில்களையும் கேட்டிருந்தார். அப்போது இராமானுஜனுக்கு 23 வயது. Hardy யின் கணிதப் புதிர்களுக்கு அவர் மிகவும் சுருக்கமான வழியில் விடை கண்டு அனுப்பினார். அவற்றைப்பார்த்த Hardy இராமானுஜனின் கணிதப்புலமையை வியந்து அவரை கணிதவியல் ஆராய்ச்சிக்காக இங்கிலாந்துக்கு வரவழைத்தார். இராமானுஜன் லண்டன் சென்று Hardy உடன் சேர்த்து பல ஆராய்ச்சிகள் செய்தார்.

இராமானுஜன் லண்டனில் தங்கியிருந்த 1914 - 1917 வரையான காலப்பகுதியில் 21 ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டார் இவரது கட்டுரைகள் மேனாட்டு கணிதவியல் அறிஞர்களை பெருவியப்பில் ஆழ்த்தின. மேனாட்டு கணித சஞ்சிகைகள் இவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் `ராமானுஜன் சாதாரணர் அல்லர் அற்புத சக்தி வாய்ந்த இந்தியாவின் கணித மேதை உலகம் போற்றும் ஒரு மாமேதை எனப்புகழ்ந்தன.

இராமானுஜனின் கணிதப் புலமைக்காக London Royal Society அவரை கௌரவிக்க ஏகமனதாக முடிவு செய்தது. இதற்கான விழாவை 1918 பெப்ரவரியில் நிகழ்த்தவும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் லண்டன் வாழ்க்கையில் வெறுப்படைந்து இராமானுஜன் ஒரு முறை தற்க்கொலை முயற்ச்சியிலும் ஈடுபட்டார். பின் Hardy அளித்த நம்பிக்கையால் மனம் தேறி Royal Society ஆல் வழங்கப்பட்ட "புலவர்" பட்டத்தைப் பெற்றார் இதன் பின் அவர் London Dirty College இல் புலவராக நியமனம் பெற்று கடமையாற்றினார். வெளிநாட்டவரால் சீரும் சிறப்புமாக கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியர் ராமானுஜர் தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில உலகப் புகழ்பெற்ற கணிதமேதையான ராமானுஜர் 1919ம் ஆண்டில் காசநோயால் பீடிக்கப்பட்டார். லண்டன் "புட்னி" மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுங் கூட உடல் நிலை தேறாததால் தாய் நாடு திரும்பினர்.

அங்கு அவர் தனது பிறந்த ஊரான கும்பகோணத்திலேயே வசிக்க விரும்பினார். ஒரு நாள் அங்கு வந்த தனது நண்பரிடம் தனது கை ரேகைகளின் கோண அமைப்புப்படி தான் 33 வயதுக்கு மேல் உயிர் வாழ்வது சிரமம் என்று முன்கூட்டியே கூறியிருந்தார்

இராமானுஜர் தனது 32வது வயதில் மிகவும் நோய்வாய்ப்பட்டிருகையில் படுக்கையில் இருந்த படியே அருமையான ஒருகணிதப்புதிரை வழி முறையோடு போட்டு முடித்தார். அவர் தனது குருவான Hardy க்கு எழுதிய கடைசிக் கடிதத்தில் அதைக்குறிப்பிடடு பின்வருமாறு எழுதியிருந்தார் ---I have discovered very interesting functions recently which I call "Mock theta functions" Unlike the false theta functions.They enter into maths as beautifully as ordinary theta functions. இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நோய் தீவிரமடைந்து 1920 ஆம் ஆண்டு சித்திரை 26 ம் திகதி தனது 32 வது வயதில் ராமானுஜன் இவ்வுலகை நீத்தார். இவரது இழப்பு கணித உலகில் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும். இவரது குருவான Hardy தனது அனுதாபச் செய்தியில் "ஐரோப்பாவின் தலைசிறந்த கணிதவியலாளர்களான ஈலர்,ஜாகோபி ஆகியவர்களுடன் ராமானுஜர் நிகரானவர். அவர் என்னிடமிருந்து கற்றதை விட அவரிடமிருந்து நான் கற்றது அதிகம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இவரது மிகச்சிறந்த கண்டு பிடிப்புகளுள் ஒன்றாக இவர் பேராசிரியர் Roger உடன் இணைந்து செய்த ஆராய்ச்சியின் பயனாகக் கண்டுபிடித்த அந்தப் புதிர் "Roger - Ramanujan identities" என வழங்கப்படுகின்றது. ஆனால் உலகப் புகழ் பெற்ற ராமானுஜன் மிகவும் அடக்க சுபாவமுடையர் ஆடம்பரத்தை விரும்பாதவர். தன் வாழ்நாள் மிக்க குறுகியதாக இருந்தபோதிலும் அதை கணிதத்துக்கு பயன்படுமாறு வாழ்ந்தவர். அவரால் கணிதம் அடைந்த முன்னேற்றம் மகத்தானது.

இவரின் பிறந்ததின நூற்றாண்டான 1987 ஆம் வருடம் அமெரிக்காவிலுள்ள பல் கலைக்கழகங்கள் அவரது ஆராய்ச்சிகளை மாணவர்களுக்கு பாடத்திட்டமாக்க முன்வந்தது. ஒரு இந்திய கணிதமேதை பற்றி அமெரிக்கப் பல்கலைக்கழங்கள் அக்கறை எடுத்துக் கொண்டது அதுவே முதல் தடவையாகும். இவரது ஆராய்ச்சிகளை பாடமாக "பென்ஸிலோனியா" பல்கலைகழகத்தில் பேராசிரியர்கள் ஜோர்ஜ் அன்றூஸ் என்பவர்கள் நடத்தி வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போல் கணிதவியலின் தந்தை என அழைக்கப்படும் போல் ஏர்டாஸ் என்ற கங்கேரிய மூதறிஞர் இராமானுஜனைப் பற்றி உலககெங்கும் சென்று புகழ் பரப்பி வந்தார்.

இன்றைய உலகை உருவாக்கிய பத்து அறிவியல் அறிஞர்களின் பெயர்களை அமெரிக்காவிலுள்ள நியூயோர்ககின் மாபெரும் பொருட்காட்சிச்சாலையில் பொறித்து வைத்துள்ளது. இராமானுஜனின் பெயரும் அதிலொன்றாக திகழ்கின்றது. இதையிட்டு தமிழர்களாகிய நாம் பெருமையடைகின்றோம். இவர் சிலேட்டுப் பலகையில் கிறுக்கிய கணக்குகள் இன்று IBM நிறுவனம் கணனிகளை செய்ய உபயோகித்து வருகின்றது. மேலும் இவருடைய தேற்றங்கள் அமெரிக்காவில் றொக்கட் தொழில் நுட்பம்,கிறிப்படாலி மற்றும் பல அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு உதவி வருகின்றது. இராமானுஜன் பணியாற்றிய "Madras Post trust" நிறுவனத்தால் சென்னை துறைமுகத்தக்கு வழங்கப் பட்ட குடிநீர் வநியோக விசைப்படகுக்கு "ஸ்ரீநிவாச ராமானுஜன்" எனப் பெயரிடப்பட்டுள்ளது எனவே இன்று இவர் உலகம் போற்றும் மாபெரும் கணித மேதையாக மதிக்கப்படுவதில் வியப்பே இல்லை.

உண்மையில் இராமானுஜன் வாழ்ச்கையும் அவரது கணி தவியலையும் வேறுபடுத்த முடியாது ஒன்றை புறக்கணித்து மற்றதை புரிந்து கொள்ளமுடியாது.

எனவே இராமனுஜனைப்பற்றி படிப்பவர்களுக்கு கணிதவியலின் பால் விருப்போ,பற்றோ இருக்க வேண்டும் என்பது தேவையில்லை. கணிதத்தில் அவருக்கிருந்த காதல் எமது உணர்வுகளையும் கிளறி விடுவதை உணரக்கூடியதாக உள்ளது. எனவே உலகை கணிதம் கணிக்கும் மட்டும் ராமானுஜரின் புகழும் சேர்த்து கணிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். உண்மையில் இராமானுஜன் "முடிவிலியான பேருலகின் முடிவை அறிந்த மனிதர்" என்று கூறப்படுவதில் வியப்பேதும் இல்லை.

இராமானுஜன் தனது பிறந்த திகதியை வைத்துக் கொண்டு கண்டுபிடித்த கட்டப்புதிர் கீழேஉள்ளது இடமிருந்து வலம் ,மேலிருந்து கீழ் இரு குறுக்கு வரிசைகள் முதலிய 10 வகைகளில் கூட்டினால் 139 வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | 139 |
| 22 | 12 | 18 | 87 | 139 |
| 21 | 84 | 32 | 2 | 139 |
| 92 | 16 | 7 | 24 | 139 |
| 4 | 27 | 82 | 26 | 139 |
| 139 | 139 | 139 | 139 | 139 |

ஆக்கம்
த.குமுதினி
2003 A/ L கணிதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைத் துளி

1) ராமனவன் கதை தொடுத்து.
ராமாயணம் படைத்தது போல்
ராமநாதன் விளித்தெழுந்து.
ராமநாதன் கல்லூரி படைத்தார்

2) மருதனார் மடம் நிறைந்த.
மகத்தான இடத்தினிலே.
தெய்வீகத் தலத்தோடு
பள்ளியை தோற்றுவித்தார் - அங்கே
கல்வியைக் கற்கவென்று

3) நிழல்கொடுக்கும் வேப்பமரம்.
அருள் தொடுக்கும் ஆலமரம்
எழில் கொடுக்கும் பூமரங்கள் - நிறைந்த
தாமரை மலர் போன்ற
அழகான பள்ளி இது.

4) இரவிலும் ஒளி கொடுக்கும்
பூரணை சந்திரன் போல்
இருண்ட உள்ளங்களை.
ஒளிர வைக்கும் பள்ளி இது.

5) அறிவாறு பெருக்கெடுக்க
அறிஞர் பலர் உருவாக
அறிவாளர் வந்து நின்று - கல்வி
அறிவூட்டும் பள்ளி இது.

6) ஆரம்பம் முதல் இறுதி வரை
ஆனந்தமாய் கல்வி கற்று
பேரின்பமாம் பல்கலைக்கழகம்.
அனுப்பி வைக்கும் பள்ளி இது.

7) நல்லறம் பேணும் நல்ல
அதிபரும் எமக்குண்டு.
நற்றவம் செய்து பெற்ற
ஆசிரியர் குழாம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) காலை விடிந்ததென்று
பள்ளி கிழம்பியதும்
குருவையே வணங்குவோம் - அவா்
ஆசி பெற்ற பின்பு - கல்வியிலே
பல புள்ளிகள் பெற்றிடுவோம்.

(9) அன்பும் பணிவும் -நல்ல.
பண்பும் அறிவும் கொண்ட
அதிபா் இருக்கின்றாா் - அவா்
தெய்வம் வடிவில் வந்து.
கல்வி அறிவினையே
எமக்கு பொழிகிண்றாா்.

(10) ஆதி அந்தமில்லா
அறிவைப் பெற்ற - பல
ஆசான்கள் உள்ளனா் - அவா்
உலகம் முழுதும் உள்ள
அறிவைப் பெற்று இங்கு
புகழினை வென்றனா்.

(11) பாடம் கற்றுத் தந்து
பாடமாக்க வைக்கும்
ஆசான்கள் தெய்வமே - எமக்கு
பாதி அறிவைத் தந்து
மீதி அன்பைத் தரும்
அறிஞரும் இவா்களே.

(12) கற்பவா் பெண்களல்லவா! - இனி
கல்வி பற்றி கூற வேண்டுமா.
கல்வியிலே திறமை கொண்டு.
புலமையிலே பெருமை கொண்டு
மற்றவா் புகழை வென்று
கற்பவா் பெண்களல்லவா,

(13) சமத்துவம் சகோதரத்துவம்
இரண்டிலும் இரண்டறக்கலந்து
ஒழுக்கத்தில் விழுப்பம் பெறும்
மாணவா் இங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14) அன்பாய் ஆனந்தமாய் - நற்
பண்பாய் பணிவிடையாய்
பண்ணிசை கோலம் முதல்
நாடகம் நடனம் வரை
வென்றுவந்த மாணவர் உண்டு.

(15) புகழ் ஒன்று பெறவென்று.
விளையாட்டுத் துறையினிலும்
பகழ் ஒன்று பெற்றுவந்த.
மகள் உண்டு பள்ளியிலே,

(16) ராமநாதன் பெயர் தொடுத்து.
அவர் புகழ் எங்குமீட்டி
நுன்கலைக் கழகம் முதல்
பல்கலைக் கழகம் வரை.
சேர் பொன் ராமநாதன்பெயரில்,
உருவான காலம் இது.
உருவாக்கும் காலமும் இது.

நன்றி

இப்படிக்கு
பா.சுபாஜினி
2003 A/L கலைப்பிரிவு

# மருத்துவக் குறிப்பு

நமது நாட்டில் இன்றைக்கு. நாட்டு வைத்தியம் மறந்துபோன சங்கதியாக அழிந்து வருகின்றது. மேலைத்தேய வைத்தியம் தலைசிறந்ததாக கருதப்படுவதற்கு முக்கிய காரணம் மாறிவரும் யுகத்திற்கு அமைய நொடிப்பொழுதில் நோய் குணமாகிவிட வேண்டும் எனக்கருதி பழைமையை மறந்து புதுமையை நாடி வருகின்றனர். நோயின் தன்மைகள் அழிவதற்கு ஒருமண்டலம் மருந்து உண்ண வேணடும் என ரிசிகளும், சித்தர்களும், முனிவர்களும் தம் அனுபவத்தால் உணர்த்திய உண்மைகள் இன்றும் அழியாமல் இருந்து வருகின்றது சித்த மருத்துவத்தில் ஒவ்வாமை கிடையாது பூரண சுகம் பெற்று விட்டாய் என உறுதியாகக் கூறலாம் மேலைத்தேய மருத்துவத்தில் அப்படியாகக் கூறிய வைத்தியர்களை நாம் இன்றும் கண்டுபிடிக்கவில்லை. உயிரைக்காப்பாற்ற முயற்சிக்கின்றோம் என்ற வைத்திய நிபுணர்களையே காண்கின்றோம்.

எமக்கு இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளையும் இஞ்சி,உள்ளி தேன், சுக்கு,மிளகு,வெந்தயம் போன்றவற்றை உணவில் சேர்க்க மறந்த காரணத்தால் அன்ரிபடியக் நுண்ணுயிர்களை செயற்கையாக உடலில் செலுத்த வேண்டிய பயங்கரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் இப் போது நடைபெறுவது கலியுகமாக இருப்பதால் உணவே மருந்து என்ற நிலையை மறந்தமையால் உயிர்கொல்லி நோய்களுடன் மனிதன் போராடி வருகிறான்.

(1) எதிர்ப்பு சத்தி குறைவுக்கு வேப்பங்கொழுந்து துவையல் காசநோய்க்கு தூதுவளைக்காய் வறுவல், தோல் சுருக்கத்திற்கு வெந்தய இட்லி, மார்பக வளர்ச்சிக்கு வாளைப்பொத்தித்துவையல் தாய்ப்பால் சுரக்க முட்டைக்கோஸ் சூப், கர்ப்பப்பை புற்று நோய்க்கு பூசனிக்காய்ச் சாம்பார், முகப்பருக்கு பப்பாசிப் பாயாசம் முடி உதிர்விற்கு கரிசாலைதுவரைக்கறி

(2) சுக்கும் கருப்பட்டியும் சேர்த்து குடி நீராக்கி குடித்துவர உடல் தளர்ச்சி நீங்கும் நன்கு பசிஎடுக்கும்.

(3) சுக்கு (வேர்க்கொம்பு) சிறிது உப்பு சேர்த்து அரைத்துச் சாப்பிட வாயு, ஒங்காளம், இரைச்சல் தீரும் நன்கு பசி எடுக்கும்.

(4) முருங்கைக்கீரையுடன் கச்சான்சேர்த்து அரைத்து சமையல் செய்தால் "பாதாம்" பருப்பின் சத்து இருக்கும்.

(5) வல்லாரை இலைகள் ஐந்துடன் மிளகு மூன்று சேர்த்து மென்று காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர மூலம் குணமாகும்.

(6) வெள்ளரிப்பிஞ்சால் சிறுநீரகத்தைக்காக்கலாம் வெந்தயத்தால் வெள்ளைப்போக்கை காக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) மண்சட்டியில் வேப்பிலைகளைப் போட்டு வாயை மூடி நன்கு சாம்பலாகும் வரை அடுப்பில் வைத்து விடவும் சாம்பல் ஆனதும் பொடிசெய்து மூன்று கிராம் எடுத்து ஐந்து கிராம் தேனில் குழைத்துச் சாப்பிட்டால் வயிற்றுப்புண் நீங்கும்.

8) அன்னாசிப்பழத்தை தேன் தோய்த்து நாற்பது நாட்கள் மதிய உணவுடன் சாப்பிட்டுவர உடல் நல்ல பலம் பெறும்.

9) தாய்ப்பால் அதிகம் சுரக்க பாலூட்டும் தாய்மார்கள் அதிகம் எள்ளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்

10) நீரிழிவு நோய்க்கு 100 கிறாம் எள்ளுப் புண்ணாக்கு முருங்கைக்கீரை இரண்டையும் உலர்த்தி பொடி ஊற்றினால் குடிமயக்கம் உடனடியாக முறிந்து விடும். தினமும் இரண்டு கிராம் அளவு மூன்று நேரம் சாப்பிட்டு வர நோய் குணமாகும்.

11) குப்பைக்கீரையை பருப்புடன் சேர்த்து சாப்பிட்டுவர உடல் அளவை போக்கும் இதனை கஷாயமாக்கி குடித்துவர நீரடைப்பு சரியாகி வரும் கீரையின் வேரை சுட்டுச் சாம்பலாக்கி பெரிய கட்டிகள் மேல் தடவ கட்டிகள் உடையும்.

12) சிறு குழந்தைகள் தொடர்ந்து அழுது கொண்டே இருப்பார்கள் அடிக்கடி மலம் கழிப்பார்கள், திடீர் திடீர் என பயந்து அலறுவார்கள் தூக்கத்தில் பயந்து அழுவார்கள் இதற்கு துளசி சாற்றிலை உடல் முழுவதும் தடவுங்கள் 50 கிராம் சாம்பிராணி 50 கிராம் கழுதையின் காய்ந்த மலம் இரண்டையும் கலந்து புகைகாட்டி குழந்தைகளின் சகல நோய்களும் இனம் புரியாத காரணங்களால் உண்டாகும் நோய்களும் நீங்கும்.

13) கரிசாலங்கன்னி இலையை அரைத்து பசுப்பால் கலந்து காலை மாலை வெறும் வயிற்றில் சாப்பிட மஞ்சள் காமாலை தீரும்.

14) கீரை உணவை பகலில் மட்டும் சாப்பிட வேண்டும் இரவில் சாப்பிடக்கூடாது கீரையை நெய் விட்டு சாப்பிட்டுவது நல்லது.

15) ருசியும் மணமும் உள்ள கொத்தமல்லி கீரையை கருவேப்பிலை, மிளகு,புளி,உப்பு,உள்ளி,வெங்காயம் என்பவற்றுடன் அரைத்து நல்லெண்ணெயில் தாளித்து உணவுடன் சாப்பிட பித்தநோய், வாந்தி, குமட்டல் என்பன நீக்கும்.

16) வைத்தியம் செய்பவர்கள் பொய்,களவு,காமம்,சூது துரோகம் இவைகளை செய்யாது கோபத்தை விட்டு ஞாபகத்தைப் பார்த்து வேதாந்த சத்துருவை நிதமும் பூசை செய்து தர்மமான முறையில் பணியாற்றினாலே வைத்தியம் சித்திக்கும்.

17) அம்மை, வைசூரி வீட்டில் யாருக்கும் வந்தால் இந்த நோய் மற்றாவர்களுக்கும் பரவாமல் இருக்க தாழை விழுதை தட்டிச்சாறு எடுத்து. நான்கு மடங்கு சக்கரையுடன் கலந்து காய்ச்சி மூன்று வேளை சாப்பிட தொற்று நோய் அணுகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு இவைகளுடன் ஏலம்,கராம்பு வால்மிளகு,சாதிக்காய்,சாதிப்பத்திரி, சுக்கு,காய்ச்சுக்கட்டி இவைகளைச் சேர்த்து தாம்பூலம் தரிக்கும் போது பாக்கைப்போட்டு வெற்றிலையின் காம்பு நரம்பு நுனி ஆகியவற்றை நீக்கியபின் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி முன் சொன்ன பொருட்களுடன் வெற்றிலை போட வேண்டும். பாக்கை முதலில் சுவைக்கின்ற போது பாக்கின் துவர்ப்பு நாக்கின் நுண்ணிய துவாரங்கனை சுருக்கி எச்சில் ஊறாமல் செய்யும் பாக்கை அதிகமாக உபயோகிக்க மலச்சிக்கல் நிவர்த்தி ஆகும் மதிய நேரத்தில் உணவு உண்டபின் வெற்றிலையுடன் சுண்ணாம்பு தடவி வெற்றிலை போட்டால் உணவு சமிபாடு அடையும். இரவில் வெற்றிலை போட்டால் வாயில் நறுமணம் இருப்பதால் துா்நாற்றம் இராது.

(19) ஒருவருடைய ஜாதகத்தில் 6ம் இடத்தை ரோகஸ்தானம் என்றும், 8ம் இடத்தை அஷ்டம் ஸ்தானம், என்றும் வியாதிகள் பாதிக்க 6-8 ம் இடங்களில் உள்ள கிரகங்கள் அதன் திசையில் புத்திகளில் அதற்கு தொடர்புடைய உறுப்புக்களில் வியாதிகளை ஏற்படுத்தும்.

(20) 6ம் வீட்டிலோ 8ம் வீட்டிலோ அதிகமான பாவக்கிரகங்களான சனி ராகு,கேது,செவ்வாய் ஆகியவை இருக்கின்ற போது அது சம்பந்தமான வியாதியும் பாதிக்கும். உடல் காரணமான சந்திரனுடன் சனிசோ்ந்தால் உடல் வியாதியாலும், சந்திரனுடன் செவ்வாய் சோ்ந்தால் உடல் விபத்தாலும் பாதிப்படையும். செவ்வாய் சுக்கிரன் சனி சோ்ந்தால் உடல் வாகன விபத்தால் பாதிப்படையும்.

(21) இஞ்சி இடித்துச் சாறு பிழிந்து டம்ளரில் ஊற்றி உறைய வைத்த சாற்றை தேனுடன் கலந்து சாப்பிட ஜலதோசம்,மூக்கடைப்பு சுவாசகாசம், தும்மல் ஆகியன நீங்கும்.

(22) வளர்பிறை வெள்ளிக்கிழமை முறைப்படி துளசிச் செடிக்கு பூசைசெய்து சாபம் நீக்கி மூலிகையின் வேரை எடுத்து மகாலட்சுமி அஷ்ரோத்திரம் மூன்று நாட்களில் ஜெபித்து வருவோருக்கு மஞ்சள் நூல் கவசம் செய்து தாயத்துள் வைத்து அணிய சகல தோசங்கம், தடைகள் நீங்கி இனிய மணவாழ்வு தரும். தடைப்பட்ட திருமணம் மற்றும் நற்காரியங்கள் தடைநீங்கி நடைபெறும்.

(23) ஊறுகாய் தயாரிக்கும் போது ஓமம் போதிய அளவு சேர்த்திட ஊறுகாய்ச் சுவை அதிகமாகும். கெட்டுப்போகாமல் நீண்ட நாள் இருக்கும்.

(24) அதிகமாகக் கேள், குறைவாகப்பேசு,கிழக்கு நோக்கி அமர்ந்து சாப்பிட ஆயுள் அதிகமாகும். ஞாயிற்றுக்கிழமையில் எண்ணெய்க் குளியல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25) நம்மைச்சுற்றி நமது வீட்டில் எப்போதும் ஒரு தேவதை கண்காணித்துக் கொண்டே இருக்கும். எனவே இல்லத்தில் இருக்கும் போது எதையும் இல்லை முடியாது என்று அபவாக்கியங்களைக் கூறாமல் தவிர்த்தல் நன்று.

(26) மனிதனின் உடலில் ஒன்பது ஓட்டைகள் மனிதனின் உயர் ஏதேனும் ஒரு ஓட்டை வழியே மரணத்தின் போது வெளியேறும் இந்த ஓட்டைகள் எப்போதும் திறந்துள்ளவையே எந்த நொடியிலும் மரணம் ஏற்படும் ஆனால் உயிருடன் இருப்பது ஆச்சரியமே தவிர இறப்பது ஆச்சரியமல்ல.

(27) பேதி தொடர்ந்து வந்த போதும் மலச்சிக்கல் ஏற்பட்ட போதும் வாய் நாற்றம் உண்டான போதும் பசி ஏற்படாமல் இருக்கும். போது மட்டும் மாங்காய் உண்ணலாம்.

(28) ஒரு கோப்பை தண்ணீரில் 2 தேக்கரண்டி தேன் கலந்து காலை வேளையில் பருகி வந்தால் இரவில் அமைதியான தூக்கம் வரும்.

(29) மீன் எண்ணெயுடன் தேனைக்கலந்து சாப்பிட்டு வந்தால் ஆறாத புண்கள் ஆறிவிடும்.

(30) பற்களில் காணப்படும்.எனாமலைப் பாதுகாக்க தேன் கலந்த நீரில் இரவில் படுக்கைக்குப் போகும் முன் வாய் கொப்பளித்து வந்தால் வாய்ப்பாகத்தில் இருக்கும் பக்றீரியாக்கள் அழிந்து பற்கள் சுத்தமாக இருக்கும்.

(31) இனிப்புப் பலகாரங்கள் உலர்ந்து கெட்டுப் போகாமல் இருக்க அதன்மீது தேன் தடவி பூசி வைக்கலாம்.

(32) இரத்தக்குறைவு அல்லது சோகை நோய் உள்ளவர்கள் இரும்புச்சத்து நிறைந்த தேனைப் பாலுடன் நாள் தோறும் கலந்து உட்கொள்ள வேண்டும்.

(33) இருதய நோய் உள்ளவர்கள் மாம்பழத்துடன் தேன் கலந்து சாப்பிட விரைவில் குணமடைவர்.

(34) கடுக்கையும் இஞ்சியையும் நன்றாக இடித்து தேனைக் கலந்து வாயைக்கொப்பளித்தால் மூளை தெளிவடையும் தலை வலி போகும் உடல் சூடு தணியும்.

(35) சிறு குழந்தைகளுக்கு பாலில் சீனி கரைத்துக் கொடுப்பதைத் தவிர்த்து. தேன் கலந்து கொடுத்தால் நல்ல பலனைப் பெறுவர்

(36) பசுப்பாலுடன் தேன் கலந்து சிலநாட்கள் பருகிவர ஜலதோசம் நீங்கும் தேனுடன் எலுமிச்சம் சாறு கலந்து குடித்தால் வாதநோய் தவிர்க்கலாம்.

(37) மயில் இறகின் சுட்டசாம்பலுடன் தேன் கலந்து கோடுத்தால் பேதியானது நிற்கும்.

(38) பிரசவ வேதனை ஏற்படும் முன்னர் 2 அவுன்ஸ் தேன் குடித்தால் சுகமான பிரசவம் ஆகும்.

(39) வெண்டிக்காய் மூளைக்கு நல்லது மூளை வளம் குறைந்தவர்கள் நிறைய வெண்டிக்காயை சாப்பிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(40) குடி மயக்கத்தில் இருப்பவர்களின் மயக்கதை தெளிய வைப்பதற்கு பெரிய கரண்டியால் தேனை வாயில் ஊற்ற மயக்கம் தெளியும்.

(41) உடல் நலத்தைக் காக்க உணவில் குளிர்ச்சி புளிப்பு இனிப்புச்சுவை காய் கறிகள் ஐஸ் வாட்டர் இவற்றைத் தவிர்க்க வேண்டும். கத்தரிப்பூண்டு,அத்திப்பிஞ்சு,அவரை,முருங்கை,சுண்டங்காய், கருணைக்கிழங்கு உடலுக்கு நல்லது.

(42) செம்பருத்திப்பூ ரோஜப்பூ தொடர்ந்து சாப்பிட்டுவர இதயம் பலப்படும்

(43) தூதுவளை இலைகளை கீரை போலவோ துவையலாகவோ செய்து சாப்பிட உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றது.

(44) உழுத்தம் பருப்பை ஊறவைத்து அரைத்து எடுத்து சிறிது எலுமிச்சம்சாறு விட்டு குழைத்துத் தடவி விட சேற்றுப் புண் வயிற்றுப் புண்கள் மடியும்.

(46) மூல நோய் பாதிப்புடையவர்கள் கோழி கருணைக்கிழங்கு தவிர மற்றக்கிழங்குகள்,வாழைக்காய், பச்சமிளகாய் சாப்பிடக்கூடாது கீரை பச்சைக்காய்கறி வாழைப்பூ பால் மோர் மட்டும் உணவில் சேர்க்க வேண்டும்.

(47) நெல்லிக்காய்சாறு ஒரு அவுன்ஸ்சும் பசுநெய் ஒரு கரண்டியும் கலந்து தினமும் காலையில் சாப்பிட்டு வாருங்கள் இதயத்திற்கு பலம் அளித்து உடல்பலத்தை அதிகரிக்கும்.

(48) தேள் கொட்டினால் வெங்காயத்தைக்கசக்கி கொட்டிய இடத்தில் தேய்த்தால் விசம் போய்விடும் மிளகாய்ப் பொடிசெய்து வெற்றிலையில் அதை மடித்து வாயில்ப்போட்டு மெல்லுங்கள் விசம் போய் விடும்.

(49) சுக்கு கொத்தமல்லி இரண்டையும் பவுடர்ஆக்கி கரண்டிப் பாலில் சேர்த்து சாப்பிட்டால் உடலில் தங்கும் கெட்ட நீர்கள் இல்லாமல் போகும்.

(50) தூக்கம் இல்லாமல் அவதிப்படுவர்கள் வெங்காயத்தை நெய்யில் வதக்கிச் சாதத்தோடு பிசைந்து சாப்பிட்டுவர தூக்கம் சரியாக வரும் .

ஆக்கம்
வ . சந்துஜா
2003 A/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதவியின் 11 வகை ஆடல்கள்

மாதவியின் ஆடல் பற்றி குறிப்பிடும் போது ஆடல் பாடல் அழகு என்பன அவசியம். என வலியுறுத்தப்படுகிறது. இவை மூன்றும் களிப்பிற்கும் ஈடுபாட்டிற்கும் உரியன. மாதவி இவற்றை மையமாக கொண்டே ஆடல்களை ஆடி இருக்கிறாள். என்பதை சிலப்பதிகார அரங்கேற்று காதையில் பெரும்பாலும் நகரம் பிரபுததுவம் சார்ந்த ஆடல் வகைகள் கூறப்படடுள்ளன.

(1) அல்லியம் :- இது கண்ணன் யானையின் மருப்பை (கொம்பை) ஒடித்ததனை காட்டும் ஆடல்.

(2) கொடுகொட்டி :- சிவபெருமான் முப்புரத்தை எரித்தபோது அது எரியுண்டு எரிவதை கண்டு பேரானந்தத்தில் கை கொட்டி ஆடிய ஆடல் இதனை கொட்டி தேசம் என்றும் அழைப்பர்.

(3) குடைக்கூத்து :- சூரனைக் கொன்ற பின் முருகனால் ஆடப்பட்ட ஆட்டம் கையில் குடையொன்றினை பிடித்துக் கொண்டு குறுக்காக கட்டியுள்ள கயிற்றில் ஏறி நின்று ஆடுவர்.

(4) குடக் கூத்து :- தன் பேரனாகிய அனுருத்தனை "வாணன்" என்னும் அசுரன் சிறைவைத்தபோது அவனை சிறை மீட்பதற்காக கண்ணன் ஆடியஆடலைக் குறிக்கும் மண்ணால் அல்லது பஞ்சலோகத்தினால் செய்ய ப்பட்ட குடத்தை கொண்டு ஆடப்படுகின்றது.

(5) பாண்டுரங்கம் :- சிவபெருமான் திரிபுரத்தை எரித்து சாம்பலாக்கிய பின்னர் தேர்ப்பாகனாக இருந்த நான் முகன் காணும்படி ஆடிய ஆடல்.

(6) மல்லாடல் :- கண்ணன் வாணன் என்னும் அசுரனுடன் மற்போர் செய்து அவனைக்கொன்றதை காட்டும் கூத்து.

(7) துடியாடல் :- சூரனைக் கொல்லும் முன் முருகன் ஆடிய ஆட்டம் துடி என்பது ஒரு வகை மத்தளம் ஆகும் கடலின் நடுவிலே ஒழிந்த சூரபன்மனுடன் போர் செய்து வென்றபின் அக்கடலையே அரங்கமாக கொண்டு துடி கொட்டி ஆடிய கூத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8) கடையம் :- வாணனுடைய "சோ" என்னும் நகரத்தில் வடக்குப் புறத்தில் இருந்த வயலில் இந்திரனுடைய மனைவியாகிய ராணி உருவத்துடன் ஆடிய ஆடலைக் குறிப்பது.

(9) பேடியாடல் :- காமன் தன் மகனாகிய அனுருத்தனை சிறை மீட்ப்பதற்காக வாணனுடைய நகரத்தில் பேடி உருவம் கொண்டு ஆடிய ஆடலைக் குறிப்பது.

(10) மரக்காலாட்டம் :- மாயோனாகிய கொற்றவை முன் எதிர்த்து போர் செய்யமுடியாத அவுணர் வஞ்சனையால் வெல்லக்கருதி பாம்பு,தேள் முதலியவற்றை புகவிட அவற்றை கொற்றவை மரக்காலினால் உழக்கி ஆடிய ஆடலை குறிக்கிறது.

(11) பாவைக்கூத்து :- போர் செய்வதற்கு போர் கோலம் கொண்டு வந்த அவுணர் மோகித்து விழும்படி இறக்கும்படி திருமகள் ஆடிய ஆடலை குறிக்கிறது ஆண்களை மயக்கும் வகையில் நிலத்தில் இருந்தும் படுத்தும் ஆடுவர் .

ஆக்கம்
ச.மேனகா
2003 A/L கலைப்பிரிவு

## பழங்களின் பிறப்பிடம்

1) திராட்ச்சை பிறப்பிடம் - கஸ்பியன் கடற்பகுதி
2) அன்னாசியின் பிறப்படும் - பிரேசில்
3) வாழையின் பிறப்பிடம் - தென்கிழக்காசியா
4) பப்பாசியின் பிறப்பிடம் - மெக்சிக்கோ
5) தோடைப்பழதின் பிறப்பிடம் - சீனா
6) எலுமிச்சையின் பிறப்பிடம் - இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுபதம் பற்றிய நன்னூலாரின் கருத்துக்கள்

ஓர் எழுத்தாயினும் ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களாயினும் சேர்ந்து பொருளை தருமாயின் அது பதம் எனப்படும்

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாகும் அது பகுபதம் பகாப்பதம் என இருபால்
ஆகி இயலும் என்ப"

எனும் நன்னூற் சூத்திரம் பதம் என்பதற்கான வரைவிலக்கணத்தை கூறுவதுடன் பதங்களை பகுபதம்,பகாப்பதம் என இரண்டாகவும் வகுக்கின்றது.

பகுதி விகுதி முதலிய உறுப்புக்களாகப் பொருளுள்ள வகையில் பிரிக்க முடியாதது பகாப்பதம் எனப்படும். இவை பெயர், வினை ,இடை ,உரி ,பகாப்பதங்களாக அமைந்திருக்கும்.

| | | |
|---|---|---|
| (1) பெயர் பகாப்பதம் | :- | நிலம் ,நீர் |
| (2) வினைப் பகாப்பதம் | :- | நட ,வா |
| (3) இடைப் பகாப்பதம் | :- | போல், மற்று |
| (4) உரிப் பகாப்பதம் | :- | உறு, நனி |

பொருள் தரக்கூடிய உறுப்புக்களாகப் பிரிபடக்கூடி சொற்கள் பகுபதங்கள் எனப்படும்.

உ + ம் :- மாடுகள் என்பதனைப் பிரித்தால் மாடு என்னும் ஒருமைப் பெயரும் 'கள்' என்னும் பன்மையை உணர்த்தும் விகுதியும் கிடைக்கும். ஒரு பதத்தில் குறைந்த பட்சம் இரண்டு கூறாவது இருக்கும்.

ஒரு பதத்தில் இடம் பெறும் கூறுகளை அவற்றின் தொழிற் பாட்டின் அடிப்படையில் ஆறு உறுப்புக்களாக வகைப்படுத்துவர்.

"பகுதி,விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாகரம் ஆறினும்
ஏற்பவை முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்"

என்னும் சூத்திர்த்தில் நன்னூலார் பகுதி,விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் ஆகிய ஆறினையும் பகுபத உறுப்புக்களாக குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பகுதி :-

ஒரு பதத்தில் ஓர் அடிச் சொல்லும் ஒன்று அல்லது பல ஒட்டுக்களும் இருக்கும் ஒரு பதத்தின் அடிப்படைவடிவம் அடிச்சொல் ஆகும், இதனையே தமிழ் இலக்கணக்காரர் பகுதி என்கின்றனர்.

உண்டான் - உண் + ட் + ஆன்
பகுதி

செத்தான் - சா + த் + த் + ஆன்

சா என்பது புணர்ச்சியில் செ என விகாரப்பட்டு வந்துள்ளது. எனவே பகுதிகள் விகாரப்பட்டு வரலாம்.

2) விகுதி :-

பகுபதத்தின் இறுதியில் வந்து திணை,பால்,எண்,இடம்,வினை, போன்ற பல்வேறு பொருள் களை உணர்த்தப்பயன்படும் உறுப்பு விகுதி எனப்படும்.

அரசன் - அரசு + அன்
பகுதி விகுதி (உயர் திணைஆண்பால் விகுதி)

வாழ்க - வாழ் + க (க வியங்கோள் விகுதி)

ஓடி - ஓடு + இ (இ பெயரெச்ச விகுதி)

இவ்வாறு விகுதிகள் பல வகைப்படும். ஒரு பதத்தில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட விகுதிகள் இடம் பெறலாம்.

உ + ம் :- மாடுகளையா என்ற சொல்லை மாடு + கள் + ஐ + ஆ என பிரிக்கலாம் இங்கு மாடுகள் என்பது பகுதி கள், ஐ, ஆ என்பன விகுதிகள்.

மாடுகளையா - மாடு + கள் + ஐ + ஆ

3) இடைநிலை :-

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் பகுபத உறுப்பு இடைநிலை எனப்படும். இது மூன்று வகைப்படும்.

1) வினை இடைநிலை :- ஒரு வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து நின்று காலம் உணர்த்தும் உறுப்பே வினை இடைநிலை.

போகின்றான்
கின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) பெயர் இடைநிலை :-

அறிஞன்

ஞ்

3) எதிர்மறை இடைநிலை

செய்யாது

ஆ

4) சாரியை :-

பகுபத உறுப்புக்களான பகுதியையும் விகுதியையும் அல்லது இடைநிலையையும் விகுதியையும் இணைப்பதற்குப் பயன்படும் பகுபத உறுப்பு சாரியை எனப்படும்

சாரியைக்குப் பொருள் இல்லை இரண்டு பகுபத உறுப்புக்களுக்கு இடையில் வந்து அவற்றை இணைப்பதே சாரியையின் செயற்பாடாகும். பழந்தமிழ் வழங்கிய இருபதுக்கும் மேற்பட்ட சாரியைகள் பற்றி நமது இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஆனால் தற்காலத்தமிழ் அவற்றுட் சில சாரியைகளை வழங்குகின்றன அன், அம், அத்து, அற்று, முதலியன இக் காலத்தில் உள்ளவை.

1) மகரஈற்றுப் பெயாகள் (ம்) வேற்றுமை உருபேற்கும் போது அத்துசாரியை பெறுகின்றன.

மரம் + ஐ = மரம் + அத்து + ஐ = மரத்தை

2) சில,பல, ஆகிய சொற்கள் வேற்றுமை உருபேற்கும் போது அற்று சாரியை பெறுகின்றன.

சில + ஐ = சில + அற்று + ஐ = சிலவற்றை

5) சந்தி :-

சந்தி என்பது புணர்ச்சி என்பதும் ஒரு பொருட் சொற்கள் சந்தி வட சொல்,புணர்ச்சி தமிழ்ச் சொல் "சந்திகளாவன புணரியலில் சொல்லப்ப டுவனவாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரங்களாம்" என ஆறுமுகநாவலர் தனது இலக்கணச் சுருக்கத்தில் குறிப்பிடுகிறார் எனினும் பகுதி, விகுதி,இடநிலை ஆகிய பகுபத உறுப்புக்கள் புணரும் போது இடையில் தோன்றும் ஓர் எழுத்தையே சந்தி என நமது இலக்கண ஆசிரியர் கருதினர் எனக் கொள்ளலாம்.

பகுதி, விகுதி,இடைநிலை ஆகிய உறுப்புக்கள் இணையும் போது அல்லது இரண்டு சொற்கள் சேர்ந்து ஒரு சொல்லாகும் போது இடையில் ஓர் எழுத்து தோன்றினால் அது சந்தி எனப்படும்.

படி + த் + த் + ஆன் = படித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) விகாரம் :-

பகுதி ,விகுதி ,இடைநிலை ஆகியன புணரும் போது அவற்றின் வடிவத்தில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

மரம் + கள் - மரங்கள் - ம் ⟶ ங்

நடந்தனன் (நட + த் + த் + அன் + அன் ) - த் ⟶ த்

இவையே நன்னூலார் பகுபதம் பற்றி கூறிய கருத்துக்களாகும்

ஆக்கம்

**பா.வினோதினி**

2003 A/L கலைப்பிரிவு

## ஒரு நிமிடத்தில் உலகில்

3 மணமக்கள் விவாகரத்துச் செய்கிறார்கள்

34 திருமணம் நடக்கிறது

68 கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன

100 பேர் மரணமடைகின்றனர்

100 தொண் இரும்பு வெட்டியெடுகக்ப்படுகிறது

114 குழந்தைகள் பிறக்கின்றனர்

850 மைல் தூரம் புவி தன்னைத்தானே சுற்றிவருகின்றது

9000 தொண் நிலக்கரி எடுக்கப்படுகின்றது

4600 பாத அணிகள் தைக்கப்படுகிறது

14000 கன அடி மழை பெய்கிறது

14000 தொண் உணவுப்பொருள் உண்ணப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2002 ம் ஆண்டு இலங்கை பொருளாதாரத்தில் ஏற்பட்ட மீட்சி தொடர்பான கண்ணோட்டம்

2002ம் ஆண்டு இலங்கையின் பேரினப்பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதற்கான காரணங்களையும் 2002ம் ஆண்டு இலங்கையின் பேரினப்பொருளாதாரத்தில் ஏற்பட்ட முன்னேற்றமும் அதற்கான காரணங்களையும்எதிர்காலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார அபிவிருத்தியை பேணக் கூடியவகையில் கையாளக்கூடிய வகையில் கையாளக் கூடிய நடவடிக்கையினையும் உள்ளடக்கிய ஆய்வுக் கட்டுரைகளாக அமைகின்றது.

2001ம் ஆண்டு இலங்கையின் பேரினப்பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு எடுத்துக்காட்டுக்கள் பின் வருமாறு.

1) பொருளாதார வளர்ச்சி 2000ம் ஆண்டு 5% இருந்து 2001 ம் ஆண்டு 1.4% எதிர்க்கணிய பெறுமதிகயில் வீழ்ச்சிகண்டது இது இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் முதல் முறையாக இடம் பெற்ற பின்னடைவாகும்.

2) பண வீக்கம் 2000 ம் ஆண்டு 6% இருந்து 2001ம ஆண்டு 14% மகா அதிகரித்தது

3) வேலையின்மை வீதம் 2000 ம் ஆண்டு 7.5% மகா இருந்து 2001ம் ஆண்டு 7.8% மாக சிறிதளவால் அதிகரித்தது

4) உள்நாட்டு சேமிப்பு வீதம் 2000 ம் ஆண்டு 20% மாக இருந்து 2001ம் ஆண்டு 16% மாக வீழ்ச்சிகொண்டது.

5) முதலீட்டு வீதம் 2000ம் ஆண்டு 28% மாக இருந்து 2001ம் ஆண்டு 22% மாக வீழ்ச்சிகொண்டது

6) ஆள்வீத மொத்த உள்நாட்டு உற்பத்தி 2000ம் ஆண்டு 899$ ஆக இருந்து 2001 ம் ஆண்டு 841$ ஆக வீழ்ச்சிகண்டது

7) நாணயமாற்று வீதம் தேய்வடைந்தது.

இத்தகைய பேரினப்பொருளாதர பின்னடைவுக்குபின்னணியாக இருந்த காரணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற அதாவது செப்டெம்பர் 11ம் திகதி இடம்பெற்ற தாக்குதலின் பாதிப்புக்கள் உதாரணமாகும். வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள்.

(2) கட்டுநாயக்க விமான நிலையத்தாக்குதலைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சி கொண்டமை. வெளிநாட்டு தொடர்புகள் பாதிக்கப்பட்டமை.

(3) வரட்சி காரணமாக விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டமை.

(4) நீடித்த வரட்சி காரணமாக நீர்மின் பாதிக்கப்பட்டமை.

(5) அரசியலில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையினால் தனியார் முதலீடுகள் மாற்றநிலையடைந்தன.

(6) உலகரீதியாக ஏற்ப்பட்ட பொருளாதாரத்தில் மந்தநிலை. இலங்கையையும் பாதித்தமை.

போன்றகாரணங்கள் குறிப்பிடலாம் எனினும் 2002ம் ஆண்டு இலங்கையின் பேரினப் பொருளாதாரத்தில் முன்னேற்ற நிலை காணப்பட்டது. அதாவது

1) பொருளாதார வளர்ச்சி 2001ம் ஆண்டு 1.4% மாக அதிகரித்தது

2) பணவீக்க வீதம் 2001ம் ஆண்டு 14% இருந்து 2004ம் ஆண்டு 9% மாக வீழ்ச்சி கண்டது.

3) வேலையின்மை வீதம் 7.8% மாக தொடர்ந்து மாற்றமின்றி காணப்பட்டது.

4) ஆள்வீதமொத்த உள்நாட்டு உற்பத்தி 2001ம் ஆண்டு 841 $ இருந்து 2002ம் ஆண்டு 872 $ டொலராக அதிகரித்தது.

இத்தகைய பேரினப் பொருளாதார முன்னேற்றத்திற்கு பின்வரும் காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

(1) சமாதானத்தின் முன்னேற்றம் காரணமாக நாட்டின் பாதுகாப்பு நிலையில் ஏற்ப்பட்ட முன்னேற்றம் இதனால் நுகர்வோர் முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்தமை

(2) வரட்சி நிலைமை குறைந்து வேளாண்மை உற்பபத்தி அதிகரித்தமை அத்துடன் நீர்மின் உற்பபத்தியில் ஏற்பட்ட பாதிப்பு நகர்த்தப்பட்டது

(3) வர்த்தகம் மற்றும் சுற்றுலா பயணிகளின் ஏற்பட்ட முன்னேற்றம்

(4) பேரண்ட பொருளாதார முகாமைத்துவத்தில் ஏற்ப்பட்ட முன்னேற்றம் அதாவது வட்டி வீத அமைப்பில் கீழ் நோக்கிய நகர்நிலை ஏற்படுத்தி உள்நாட்டு சந்தையில் நிரந்தரத்தன்மையை முன்னேற்றியமை அத்துடன் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் தொடரப்பட்டமை மிதக்கவிடப்ட்ட செலாவணி வீத முறைமையில் கீழ் நிதியல் சந்தைகளின் உறுதிப்பாடு மேன்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) உலக பொருளாதரத்தில் ஏற்பட்ட மீட்சி

போன்ற காரணங்களே அடிப்படையாக அமைந்தன இத்தைகைய பொருளாதார மீட்சி தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வகையில் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்துக்கான வாய்ப்பு முன்னேற்றம் கண்டுவருவதனாலும் பொருளாதார சீர்திருத்த கொள்கைள் மற்றும் அமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் என்பவற்றுக்கான கடைமைப்பாடு என்பன அதிதரித்து காணப்படுவதால் இலங்கை அதன் வரலாற்றில் முக்கியமான ஒரு கட்டத்தில் இருக்கின்றது. இவ்வாறு முயற்சிகளுக்கான உறவை வழ ப்பதற்கான அவர்களின் விருப்பத்தை சர்வதேசசமூகம் ஏற்கனவே வெளிப்படுத்தியிருப்பதால். இலங்கை அந்த நல்லெண்ணத்திலிருந்து பெறக்கூடிய ஆகக்கூடிய நன்மையை அடைவதற்கான தனித்துவம் வாய்ந்த இச்சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது.

எனினும் அந்த நன்மையினைப்பெறும் வேகமும் அளவும் தேசிய ஐக்கிய தொடர்பில் தேசிய கருத்தொற்றுமையை அடைவதற்கான அனைத்து இலங்கையர்களினதும் கடமைப்பாங்கு மற்றும் விரைவான பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கான அர்த்தமுள்ள பொருளாதார சீர்திருத்த ங்களை முன்னெடுத்துச் செல்வதற்கான அவர்களது தீர்மானத்திலுமே முழுமையாகத் தங்கியிருக்கின்றது.

ஆக்கம்
திரு .சி.சிவகுமாரன்
ஆசிரியர்
யா / கொக்குவில் இந்து கல்லூரி

- துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்து விடுங்கள் அனால் அது உங்களுக்கு கற்ப்பித்த பாடத்தை மறந்து விடாதீர்கள்
- உழைப்பின் வேர்கள் கசப்பானவை ஆனால் அதன் கனி சுவையானது
- புகழ்சியால் நல்லவன் மிக நல்லவனாகிறான, கெட்டவன் மிக கெட்டவன் ஆகிறான்.
- நேற்றென்பது அனுவம் நாளை என்பது நம்பிக்கை இன்று என்பது ஒன்றிலிருந்து இன்னென்றிற்கு திறமையாகச் செல்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீட்டு நியமம் - 9

## காசுப்பாய்ச்சல் கூற்று

இந் நியமம் 1996 JANUARY 01 ல் இருந்து அமுலுக்கு வந்தது

(01). **நோக்கம்**

நிதி அறிக்கைகளைப் பயன்படுத்துவது ஒரு நிறுவனம் தொடர்பான பொருளாதார தீர்மானம் எடுப்பதற்கான தகவல்களை வழங்குவதே காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கம்.

அதாவது ஒரு நிறவனத்தின் காசும் காசுக்க சமனானவற்றை உருவாக்கக்கூடிய வல்லமையும் அவற்றை உருவாக்கம்.நேரம்,உறுதித்த ன்மை என்பன தீர்மானம் எடுத்தலுக்கு அவசியமானதாகும். அவற்றைக் காசுப்பா ய்ச்சல் கூற்று வழங்குகிறது.

(02).. **பரப்பு**

நிதியறிக்கைகளை தயாரித்து வெளியிடும் ஒவ்வொரு நிறுவனங்களும் அவை தயாரிக்கப்படும் காலம் தொடர்பாக காசுப்பாய்ச்ச்ல் கூற்று ஒன்றையும் அந்நிதியறிக்கையின் ஒரு பகுதியாகச் சேர்ந்து வெளியிடப்பட வேண்டும்.

## காசுப்பாய்ச்சல் கூற்றின் நன்மைகள்

(1). ஒரு நிறுவனத்தின தேறிய சொத்துகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் அதாவது நிதிக்கட்டமைப்பு மாற்றமடையும் நிலமை (திரவத்தன்மை கடன்தீர்க்கும் தன்மைஉட்பட)பற்றியவிளக்கத்தை காசுப்பாய்ச்சல் கூற்று தருகிறது.

(2.). பல்வேறு நிறுவனங்களை ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் அவற்றின் காசினையும் அதற்குச் சமமானவற்றை உருவாக்கும் வல்லமையே அறிய உதவுகிறது.

3.) காசுப்பாய்ச்சல் ஒரு நியம அமைப்பாகக் காணப்படுவதால் ஒரே நிகழ்வுகளும் கொடுக்கல் வாங்கல்களும் ஒவ்வொரு நிறுவனங்களும் வேறுபட்ட கணக்கு முறையை பின்பற்றுவதைத்தவிக்கிறது.இதனால் நிறுவனங்களுக்கு இடையிலான ஒப்பிடுகை, நம்பிக்கை வாய்ந்ததாக அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.) காசுப்பாய்ச்சல் கூற்று தகவல்கள் வரலாற்று ரீதியான காசுப்பாய்வு, தகவல்கள் எதிர்கால காசுப்பாய்ச்சலின் தொகை அதாவது காசுப்பாதிவ, நேரகாலம், உறுதித்தன்மை என்பவற்றிற்கான குறிகாட்டியாக விளங்குகிறது.

## வரைவிலக்கணம்

**காசு**

கையில் உள்ள காசையும் கேள்வி வைப்புகளையும் குறிக்கும்

**காசும் காசுக்கு சமனானவை**

குறுங்காலத்தில் குறைந்த ஆபத்துடன் காசாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மை உடைய முதலீடுகள் ஆகும்.

**காசுப்பாய்வு**

காசும் காசுக்கு சமனானவற்றினதும் உட்பாய்ச்சல், வெளிப்பாய்ச்சல் விடயங்கள்ஆகும்.

**செயற்பாட்டு நடவடிக்கைகள்**

ஒரு நிறுவனத்தின் முதன்மையான வருமானம்உழைக்கும் நடவடிக்கைளகவும்முதலிட்டு நோக்கம் அல்லது நிதியீட்டல் தொடர்பான நடவடிக்கைகள் அல்லாதனவும் ஆகும்.

**முதலீட்டு நடவடிக்கைகள்**

நீண்ட காலச் சொத்துகள் மற்றும் காசுக்கு சமனானவையாக கருதப்படாத முதலீடுகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளல் அகற்றுதல் தொடர்பான நடவடிக்கைகள் ஆகும்.

**நிதியீட்ட நடவடிக்கை**

நிறுவனம் ஒன்றில் உரிமை மூலதனம் or கடன்மூலதனதொகையன் அளவுமற்றும் கடடமைப்பு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் ஆகும்.

அடிப்படைக் காசோட்க் கூற்று காட்டுவது எங்கிருந்து காசு வருகின்றது எனவும் எங்கு செலவிடப்படுகின்றதும் ஆகும். அவ்வாறான காசோட்டத்தில் பின்வரும் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| காசு உள்ளோட்டம் | காசு வெளியோட்டம் |
|---|---|
| இலபம் | நட்டம் |
| நிலையான சொத்து விற்பனை | நிலையான சொத்துகொள்வனவு |
| இருப்புக் குறைவு (வி/னை) | இருப்பு அதிகம் (கொ/வு) |
| கடன்பட்டோர் குறைவு | கடன்பட்டோர் அதிகரிப்பு |
| மூலதனமிடல் (பங்குவழங்கல்) | பற்று/பங்குலாபம் கொடுத்தல் |
| கடன் பெறல் | கடன் மீளச்செலுத்துதல் |
| கடன் கொடுத்தோர் தொகை அதிகரிப்பு | கடன் கொடுத்தோர் தொகை குறைவு |

பொதுவாக ஆரம்பத்தில் இருந்து காசு மீதியுடன் மேற்குறிப்பிட்ட நடவடிக்கை களின் மூலம் வரும் வித்தியாசத்தை சேர்த்து இறுதி மீதி பெறப்படும்.

பொதுவாக காசோட்ட கூற்றின் செயற்பாடுகளை மூன்று பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகிறது.

(1). செயற்பாட்டு நடவடிக்கைகள்
. முதலீட்டு நடவடிக்கைகள்
நிதியீட்ட நடவடிக்கைகள்

## செயற்பாட்டு நடவடிக்கைகள்

ஒரு நிறுவனத்தின் முதன்மையான வருமானம் உருவாகும் நடவ டிக்கைகளையும்முதலீட்டு நோக்கம் or நிதியீட்டல் தொடர்பான நடவடிக்கைகள் அல்லாதனவும் ஆகும்.

நிறுவனம் ஒன்றில் செயற்பாட்டு நடடிக்கைகளில் இருந்து உருவாகும் காசுப்பாய்ச்சலின் பிரதான குறிகாட்டியாகும். காரணம் நிறுவனம் ஒன்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவாக்கப்படும் காசுப்பாய்ச்சல் ஆனது நிறுவனத்தின் பின்வருவனபற்றிய இயலுமையை தீர்மானிக்கும்.

(1.) கடன்கள் திருப்பி செலுத்தும் ஆற்றல்.
(2.) நிறுவனத்தின் செயற்பாட்டு இயலுமையை தீர்மானக்கும்.
(3.) வெளியக நிதியீட்டம், இன்று முதலீடுகளை மேற்கொள்ளும் ஆற்றல் தீர்மானிக்கப்படும்.
(4.) பங்குலாபத்தை வழங்கும் ஆற்றலை தீர்மானிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல் நிறுவனத்தின்அடிப்படையான வருமானம் உழைக்கும் வகையுடன் தொடர்பு கொண்டதாகும். ஆதாவதுநிறுவனத்தின் இலாபநட்டத்தினைதீர்மானிப்பதுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் என்பற்றுடன் தொடர்புகொண்ட விடயமே செயற்பாட்டிலான காசுப்பாய்ச்சல் ஆகும்.

E - 9 -1.) பொருட்களை விற்றல் சேவைகளை வழங்கல் என்பவற்றின் மூலம் பெற்ற பணம்

2.). தனியுரிமைக்கட்டணம், கடடணங்கள், தரகு போன்ற வருமானக்கொடுப்பனவு

3.) பொருட்கள் மற்றம் சேவை வழங்குனர்களுக்கான கொடுப்பனவு

4.) ஊழியருக்கான காசுக் கொடுப்பனவு

5.) காப்புறுதிக் கட்டணம், நட்டஈட்டுக்கோரிக்கை போன்ற தன்மை தொடர்பான காசுப் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும்

6.) வருமானவரி தொடர்பான காசுக் கொடுப்பனவுகள்

7.) வியாபாரநோக்கிலானஒப்பந்தங்கள்மீதானகாசுப் பெறுவனவுகளும் காசுக் கொடுப்பனவுகளும்.

பொதி ஆதனம், மற்றும் உபகரணங்கள் தொடர்பான அகற்றலின் போது எழக்கூடிய நன்மைகள் இழப்புகள் நிறுவனத்தின் இலாபநாட்டங்களை மதிப்பிடுவதைக் கவனத்தில் கொண்டாலும் அவை செயற்பாட்டு நடவடிக்கையாக கருதப்படாது முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்படுவதாக கருதப்படும்.

பின் விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பிணைப்பத்திரங்கள் கடன்ஆவனங்கள் தொடர்பான காசுப்பெறுவனவுகள், காசுப்பெறுவனவுகளின் செயற்பாட்டுநடவடிக்கையுடன் தொடர்புடையவையாக இருத்தல் வேண்டும்.

## முதலீட்டு நடவடிக்கைகள்

இது எதிர்காலத்தில் வருமானத்தையும் காசுப்பாய்வையும் ஏற்படுத்துவதற்கு செய்யப்பட்ட செலவீனங்கள் தொடர்பான விபரங்களை விளக்குவதாகும். அதாவது முதலீட்டுநடவடிக்கைகள் என்பது நீண்டகால சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல், அகற்றல்தொடர்பானதும் காசும் காசுக்கு சமனானவையாகவும் கருதப்படாதமுதலீடுகள்என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைகள் ஆகும்.

1.) ஆதனம், பொதி மற்றும் உபகரணம்,அருவச்சொத்துகள்,ஏனைய நீண்டகாலச்சொத்துகளைக் கொள்வனவு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.. ஆதனம் பொதி மற்றும் நீண்டகாலச் சொத்துகளை விற்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் காசுப்பெறுவனவு.
3. மற்றைய நிறுவனங்களின் உரிமைகள் மற்றும் கடன் ஆவனங்களை விற்பதன் மூலம்பெறும் காசுப் பெறுவனவு.
4. மற்றைய நிறுவனங்களின் உரிமைகள் மற்றும் ஆவனங்கள் பெறுவதற்கான காசுக்கொடுப்பனவுகள்.
5. ஏனைய நிறுவனங்களிற்கு கொடுத்த காசு முற்பணங்களும் கடன்களும்.
6. ஏனைய நிறுவனங்களிற்கான காசு முற்பணம் கடன் என்பவற்றை மீளப்பெறும்போதுகிடைத்த காசு.

## நிதியீட்ட நடவடிக்கைகள்

நிறுவனம் ஒன்றில் உரிமைமூலதனம் அல்லது கடன் தொகையின் அளவு மற்றும்கட்டமைப்பு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் ஆகும். நிதியீட்ட நடவடிக்கைகள் எதிர்கால காசுப்பாய்வு தொடர்பான முற்கணிப்புகளை மேற்கொள்ள உதவும். இந்த நடவடிக் கைக்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்

1. பங்கு வழங்கல் or உரிமை ஊடகங்களை வழங்குவதன் மூலம் பெற்றகாசு.
2.. பங்குகளை விற்பதற்காக கொடுத்த காசு.
3. தொகுதிக்கடன்கள் மற்றம் நீண்டகால குறுங்கால காசுப் பெறவனவுகள் மூலம் பெற்றகாசு.
4. குறுங்காலம் மற்றும் நீண்டகால கடன் பொறுப்புகளை தீர்ப்பதற்காக செலுத்தப்பட்ட காசு.
5. நிதி குத்தகை தொடர்பான குத்தகைக் கட்டணம்.

## செயற்பாட்டில் இருந்தான காசுப்பாச்சலை அறிக்கையிடல்

1.) நேர்முறை (DIRECT METHOD)
2.) நேரில் முறை (INDIRECT METHOD)

### நேர்முறை

இம் முறையில் அறிக்கையிட வேண்டுமாயின் காசு தொடர்பான பகுப்பாய்வு இதனை இங்கு மொத்தக்காசுக் கொடுப்பனவுகளின் முக்கிய பகுதிகளும் வெளிக்காட்டப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| வாடிக்கையாளரிடம் இருந்து பெற்றகாசு | xxx |
| கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு | xxx |
| ஊழியர் தொர்பான கொடுப்பனவுகள் | xxx |
| ஏனைய காசு கொடுப்பனவு/பெறுவனவு | xxx |

ஆகியவற்றில் இருந்து செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய காசோட்டம் கணிப்பிடப்படும் xxx

NOTE :-

நிறுவனங்கள் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காசுப்பாய்வினைநேர்முறையில் அறிக்கையிடுவதிலேயே ஊக்குவிக்கப்படுகிறது. ஏனெனில் எதிர்காலகாசுப்பாய்வினை மதிப்பீடு செய்து கொள்ளக்கூடிய தகவல்களை நேர்முறை மட்டுமேவழங்குகிறது.

**நேரில் முறை**

இங்கு நிறுவன தேறியலாபம் நட்டத்துடன் காசு தொடர்பற்ற கொடுக்கல் வாங்கல்கள் சீராக்கப்படும்.

1. காசுடன் தொடர்பற்ற விடயங்காளான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் பிற்போடப்பட்ட வரி தேறாத அந்நிய நாணய இலாபங்களும் நட்டங்களும்
2. இருப்பினும், செயற்பாட்டு பெறவனவுகளிலும் கொடுப்பனவுகளிலும் குறிப்பிட்ட காலத்தில்நிகழ்ந்த மாற்றம்.
3. காசில் ஏற்படுத்திய தாக்கத்தை ஏற்படுத்தும் முதலீடு நிதியிடல் நடவடிக்கைகள் என்பனசீராக்கத்திற்கு உட்படும்.

| | | |
|---|---|---|
| செயற்பாட்டு இலாபம் (வரிகளுடன்) | | xxx |
| நிலையான சொத்து வி/னை நட்டம்/ இலாபம் | xx | |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | xx | |
| இருப்பு அதிகரிப்பு | xx | |
| கடன்பட்டோர் அதிகரிப்பு/குறைவு | xx | |
| கடன் கொடுத்தோர் அதிகரிப்பு/குறைவு | xx | xxx |
| செயற்பாட்டு நடவடிக்கையால் இருந்தான தேறிய காசோட்டம் | | xxx |

ஆக்கம்
மொ.வினோஜனி
2003 A/L வர்தகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு துணுக்குகள்

- முதலாவது உலகக்கிண்ண கிறிக்கெற் போட்டி 1975 ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றது.
- உலகக் கிண்ண கிறிக்கெற் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச விளையாட்டுசங்கத்தால் நடாத்தப்பட்டு வருகிறது
- இலங்கைக்கு 1982ம் ஆண்டு ரெஸ்ற் கிறிக்கெற் அந்தஸ்து கிடைத்தது.
- 2003 உலகக்கிண்ணப் போட்டியில் தடை செய்யப்பட்ட மருந்து உட்கொண்ட வீரர் - ஷேண் வோர்ன்.
- இந்தியாவின் நட்சத்திர கிறிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கார் தனது நூறாவது ரொஸ்றபோட்டியில் இங்கிலாந்தில் விளையாடினார்.
- இதுவரை கிறிக்கெற் சிறாட் விருது பெற்றோர் விபரம்

**1995 - 1996 - பிரையன்டலாரா**
**1996 - 1997 - வெங்கடேஷ்**
**1997 - 1998 - சனத்ஜெயசூரியா**
**1998 - 1999 - ஜக்கலிஸ்**
**1999 - 2000 - சௌரங்குலி**
**2000 - 2001 - முத்தையா முரளிதரன்**
**2001 - 2002 - முத்தையா முரளிதரன்.**

- முதலாவது உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி 1930 ம் ஆண்டு தென் அமெரிக்காவின் உருகுவேயில் இடம்பெற்றது. இதில் உருகுவே அணி வெற்றிபெற்றது.
- உதைப்பந்தாட்ட உலகக் கிண்ணத்தை 3முறை வென்ற அணியில் இடம்பெறும் பிறேசில் வீரர் பீலோ ஆவார்.
- 17 வது உலகக்கிண்ணப் போட்டி 2002 ம் ஆண்டு தென்கொரியா, யப்பான் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்டது. இதில் பிறேசில் அணி வெற்றிபெற்றது.
- இதுவரை நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் அதிகம் கோல்அடித்த வீரர்களின் விபரம் பின்வருமாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1930 - கிலிர்மோ சடபைல் (ஆர்ஜன்ரினா 8 கோல்கள்)
1934 - எட்மன்ட் கோனன் (ஜேர்மனி), ஏஞ்சலோ சியாவியோ (இத்தாலி) ,ஆல்டிதிச்நெஜட்லி (செக்கோஸ்லோவாக்கியா)4 கோல்கள்.
1938 - லியோனிடாஸ் (பிறேசில்) 8 கோஷ்கள்
1950 - ஏட்மிர் (பிறேசில்) 8 கோல்கள்
1954 - சான்டஸ் கொக்ஸி (ஹங்கேரி) 11கோல்கள்
1958 - ஜஸ்ட்பொன்டைன் (பிரான்ஸ்) 16 கோல்கள்
1962 - கரின்சா வாவா (பிறேசில்), ட்ராஜன் ஜர்க்கோவிக் (யுகோஸலாவியா), லியோனல் சானிசஸ் (சிரி), வலன்ரின் இவானோவ் (ரஷியா), பலோரியான் ஆல்பிரட் (ஹங்கேரி)4 கோல்கள்.
1966 - இஸியோபியோ (போர்த்துக்கல்) 9 கோல்கள்
1970 - ஜேர்ட் முல்லர் (மேற்கு ஜேர்மனி) 10 கோல்கள்
1974 - இரசிகர்கர்ஸ் லேடோ (போலநடது) 7 கோல்கள்
1978 - மரியோ கெம்பஸ் (ஆர்ஜென்டினா) 6 கோல்கள்
1982 - பாலோ ரோசி (இத்தாலி) 6 கோல்கள்
1986 - கரிலினேக்கர் (இங்கிலாந்து) 6 கோல்கள்
1990 - டோடோ சிலயச்சி (இத்தாலி) 6 கோல்கள்
1994 - சேலக்ரிகோ(ரஷியா),ரிஸ்டோஸ்டாய்ச்காவ் (பல்கேரியா)6கோல்கள்
1998 - டேவர்சகர் (குரோஷியா) 6 கோல்கள்
2002 - ரொனால்டோ (பிரோலில்) 8 கோல்கள்.

**ஆக்கம்**
வே.நிருபா
2005 கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப்பயன் கோட்பாட்டாய்வு

ஒருவன் ஒரு பொருளை நுகரகின்றபோது அவனுக்கு ஏற்படும் திருப்தி பயன் என்று கூறப்படும்.இவ்வாறு நுகருகினற அலகுகளின்மூலம் பெறுகின் றபயன்களின் கூட்டுத்தொகையே மொத்தப்பயனாகும். அலகுகளை தொ டர்ந்து நுகரும்போது, ஒவ்வொரு மேலதிக அலகுகளினாலும் மொத்தப் பயனில் ஏற்படுகின்ற அதிகரிப்பே எல்லைப்பயன் எனப்படும் அட்டவனையின் உதவியுடன் இக்கோட்பாட்டினை விளக்க முடியும்.

| அலகுகளின் எண்ணிக்கை | மொத்தப்பயன் | எல்லைப்பயன் |
|---|---|---|
| 01 | 90 | 90 |
| 02 | 170 | 80 |
| 03 | 240 | 70 |
| 04 | 300 | 60 |
| 05 | 350 | 50 |
| 06 | 390 | 40 |
| 07 | 420 | 30 |
| 08 | 440 | 20 |
| 09 | 450 | 10 |
| 10 | 450 | 0 |
| 11 | 440 | -10. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலுள்ள அட்டவணையானது அலகுகளின் எண்ணிக்கைக்கும் மொத்தப்பயன்,எல்லைப்பயன் ஆகியவற்றுக்கும் இடையிலான தொடர்பினை விளக்குகின்றது.ஒரு பொருளை நுகர்ந்துகொண்டு செல்லும்போது எல்லைப்பயன் குறைந்துகொண்டு செல்லும். அவ்வாறாயின் சில அடிப்படை ஏடுகோள்கள் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.


1) நுகருகின்ற அலகுகள் யாவும் ஒரே தன்மையானவை.
2) பணத்தின் எல்லைப் பயனானது மாற்றமடையவில்லை.
3) பொருட்களின் விலையில் மாற்றம் இல்லை.

அட்டவணையின் படி அலகுகளின் தொகை அதிகரிக்க அதிகரிக்க எல்லைப் பயனின் அளவானது குறைந்துகொண்டு செல்வதையும் மொத்தப்பயனின் அளவுஅதிகரித்துக்கொண்டு செல்வதையும் காணலாம். ஒரு கட்டத்தின் பின் எல்லைப்பயன் பூச்சியநிலையை அடையத் தொடங் குவததையும் மொததப்பயன் குறையத்தொடங்குவதையும் அவதானிக்கலாம். எல்லைப் பயனுக்கும் மொத்தப் பயனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

பொருளின் அலககளின் தொகை அதிகரித்துக்கொண்டு செல்கின்றபோது எல்லைப்பயனானது குறைந்துகொண்டு செல்லும். ஒருகட்டத்தில் எல்லைப்பயன் பூச்சிய நிலையை அடைகிறது. அதன் பின்னர் எல்லைப்பயன் ஆனது எதிர்கணிய நிலையை அடைகிறது. நுகர்வோன் ஒருவன் நுகருகின்ற பொருளில் தெவிட்டு நிலை ஏற்படும்போது தான் எல்லைப்பயன் ஆனது பூச்சிய நிலையை அடைகின்றது, எல்லைப் பயன்ஆனதுநேர்க்கணியமாக இருக்கும்.வரைக்கும் மொத்தப் பயனானது அதிகரித்துக்கொண்டு செல்லும். ஆனால் அலகுகளின் தொகை கூடக்கூட அதிகரிப்பு வேகமானது குறைவாகவேஇருக்கும். எவ்விடத்தில் எல்லைப்பயன் பூச்சிய நிலையை அடைகின்றதோ அவ்விடத்தில்மொத்தப் பயனானது உச்ச நிலையை அடையும். எல்லைப்பயன் எதிர்க்கணிய நிலையைஅடைந்தால் மொத்தப் பயனின் அளவு அதிகரித்த வேகத்தில் குறைவடையத் தொடங்கும். அட்டவணையில் 11வது அலகை நுகருகின்றபோது எல்லைப்பயன எதிர்க்கணிய நிலையைஅடைகின்றது. அதேவேளையில் மொத்தப்பயனின் அளவு 450 இலிருந்து 440 ஆக குறைவடைகின்றது. இதனைப் பின்வரும் வரைபடம் புலப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிலைக்குத்தச்சில் பயன் என்பதும் கிடையச்சில் அலகுகள் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளன. அலகுகளின் தொகை கூடக்கூட எல்லைப்பயனின் அளவு குறைந்துவருவதால்தான்எல்லைப் பயனைக் காட்டுகின்றன கோடும் மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாகச் செல்கின்றது. எல்லைப் பயன் பூச்சியமாகும் இடத்தில் அதனைக் காட்டுகின்ற கோடானதுகிடையச்சை வெட்டுகின்றது.

வெட்டுகின்றது. எல்லைப்பயன் நேர்க்கணியமாக இருக்கும் வரைக்கும் மொத்தப்பயனைக்காட்டுகின்ற கோடானது. இடமிருந்து வலமாக கீழிருந்து மேல்நோக்கிச் செல்கின்றது.பின்னர் எல்லைப்பயன் எதிர்க்கணிய நிலையை அடைகின்றபோது மொத்தப்பயனைக் காட்டுகின்ற கோடானது மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக திரும்புகின்றது. இந்த எல்லைப்பயன் கோட்பாடானது கேள்விக்கோட்டின் போக்கினை விளக்குவதற்காக எழுந்த ஆரம்பகோட்பாடாகும். எல்லைப்பயன் கோடும் பொருளின் கேள்விக்கோடும் ஒரே போக்கில் அமைவதைக் காணலாம். எனினும் இவ் எல்லைப்பயன் கோட்பாடானது சில பொருட்களைப் பொறுத்து பொருந்தமாட்டாது எனக் கூறப்படுகின்றது.

1) மது அருந்தம் ஒருவர் அதனைத் தொடர்ந்து அருந்துகின்ற போது முதலாவது அலகை விட இரண்டாவது அலகில்கூடுதலான பலனைப் பெறுகின்றார்கள் எனக் கூறப்படுகினறது.
2) அபூர்வப் பொருட்களை சேகரிப்போர் பொருட்டும் இவ்வித பொருந்தமாட்டாது எனக் கூறப்படுகின்றது. உதாரணமாக முத்திரை சேகரித்தல், பழைய நாணயங்களை சேகரித்தலைக் கூறலாம்.
3) உலோபிகள் அல்லது கஞ்சத்தனம் உடையோரைப் பொறுத்தும் இவ்வித பொருத்தாதுஎனக்கூறப்படுகின்றது.

ஆக்கம்
**ச.அனுஷா**
2003 A/L கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PASSIVE SMOKING

The barmful effects of passive smoking have been reciving much public attention of late It is, there fore, imperative on our part as students to understand wbat passive smoking is and Think in terms of the measure . we sbould take to belp eradicate this menace.

We all koow that smoking is bad for health. Doctors keep telling us that smoking is harmful. smoking causes cancer and various other dread ful diseases. Heart Patientsand advised not to smoke and so are blood pressure patients Expectant mothers are warned no to touch the cigarette.

As a result of these warnings, there is growing awareness of the dangers of smoking all over the world some countries have already put a stop to advertisements that promote the sale of cigarettes.what many people do not know is that passive smoking is more harmful when somebody seated near us smokers we are compelled to inhale the smoke he lets out and we become smoke unconsciouslyThis is the worst kind of smoking because the smoke we inhale is more toxic than the smoke drawn througb the cigarette. This is what doctors call passive. smoking or second hand smoking.

Finding out about the effects of secondhand smoking should shake up parents who allow smoke around their children. A fter analyzing data from more than a hundread studies worldwidea Famous doctor has come to the conclusion that children exposed to tobacco smoke face health nsks, sucd as sudden Infant Deatb syndrome, Ear Infections,Respiratory Infections and Asthma.It has long been established that secondhand smoking causes long cancer. And a recent Harvard study Found that non - smoking women regulary exposed to second hand smoke doubled theirrisk of developing beart disease.What the smoker does to himseif may be his business but what he does to the non - smoker is quite a different matter. such people must be persuaded not to endanger the lives of others. now the question arises as to how we can try to solve this problem. there may be a smoker in our home.It may be the father, a



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

brother an uncle or somebody else If we can get that person to accept that secondhand smoke could hurt a loved one then that person is much more likely to stop smoking. This is easier said than doneThe power of nicotine addiction is to great for a smoker to stop smoking. easily. unfortunately not everyone has the will power we may not be able to dissuade a stanger From smoking. But one can try to get ones father to stop smoking if he smokes.surely he loves his progeny more than his cigarette If this cannot he achieved , let us at least make it a point to tell those who smoke in our homes in no uncertain terms that we want to leave the house whenever they want to enjoy a cigarettle rather than endangering the health of the innocent children and other non -smokers As the saying goes. where there is a will here is a way. Having said that I wold like to entreat myfriends to join hands with me to wage war against the smokers who soil the atmosphere at ourhomes as a first step to wards eradicating smoking.

A.KAJEETHA
2004 A/L Arts

# வளிமண்டல இயக்கம் ஓர் அடிப்படை விளக்கம்

*முகவுரை*

மனித வாழ்வில் மறைமுகமாகவும் நேரடியாகவும் வளிமண்டலமானது கொண்டிருக்கும் செல்வாக்கு அளப்பரியது. வளிமண்டலம் (Atmosphere) பல்வேறு நுட்பமான சிக்கலான செயல் முறைகளுக்கு உற்ப்பட்டுள்ளது அப்படியான வளி மண்டலம் பற்றிய அடிப்படை விளக்கத்தை மாணவர்கள் இதனூடாக பெற்றுக் கொள்ளலாம் .

**அமுக்கம்**

- குறிப்பிட்ட ஒரு அலகு பரப்பில் தாக்கும் வளியினால் உண்டாகும் நிறையே அமுக்கம் எனப்படும் வளியின் நிறையினையே அமுக்கம் என அழைக்கப்படும்.
- அமுக்கத்தினை அளவிடப் பயன்படும் கருவி "பாரமாணி" ஆகும்.
- அமுக்கமானது " மில்லிபார் "(அடி) என்ற அலகினால் குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ அமுக்கதினை அதன் அளவின் அடிப்படையில் இருவகைப்படுத் தலாம். 1) உயரமுக்கம்
2) தாழமுக்கம்

உயரமுக்கம் :-

கடல் மட்ட சராசரி அமுக்கம் 1013 ஐ விட கூடுதலான அமுக்கத்தினை உயர் அமுக்கம் என அழைப்பர் ஒப்பீட்டுரீதியில் வளியமுக்கம் அதிகமாக உள்ள பிரதேசங்களை உயரமுக்கம் எனலாம் உயரமுக்கம் நிலவும் பிரதேசங்களில் வளியானது கீழ் நோக்கிய பெயர்ச்சியினைக் கொண்டிருக்கும்.


தாழ்முக்கம் :-

சராசரியாக 1013அடி விட குறைவான அமுக்கம் நிலவுமாயின் தாழ்முக்கம் என அழைக்கப்படும் ஒப்பீட்டு ரீதியில் வளியமுக்கம் குறைவாக உள்ள பிரதேசங்களை தாழ்முக்கம் எனலாம் தாழ் அமுக்கம் பிரதேசங்களில் வளியானது மேல் நோக்கி பெயர்ச்சியைக் கொண்டிருக்ககும்.

♦ அமுக்கமானது படிபபடியாக உயரமுக்கத்தில் இருந்து தாழ் அமுக்கதினை நோக்கி குறைவடைந்து செல்லும் போக்கினை "அமுக்கசாய்வு வீதம் " என அழைக்கப்படும்

♦ அமுக்க சாய்வு வீத்ததிற்கு ஏற்ப
1) காற்றுக்கள்
2) காற்றின் வேகம்
3) காற்றின் திசை என்பன தீர்மானிக்கப்படும்

**உலகின் அமுக்கப்பரம்பல்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் அமுக்கப் பரம்பலைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்

a) மத்திய கோட்டுத் தாழ்அமுக்கம்
b) அயன அயல் உயரமுக்க வலயம் (வடக்கு)
b1) அயன அயல் உயரமுக்க வலயம் (தெற்கு)
c) இடை வெப்பத் தாழமுக்க வலயம் (வடக்கு)
c1) இடை வெப்பத் தாழமுக்க வலயம (தெற்கு)
d) முனைவு உயர் அமுக்க வலயம் (வடக்கு)
d1) முனைவு உயர் அமுக்கம் வலயம் (தெற்கு)

மத்திய கோட்டுத்தாழமுக்க வலயம்

- வடக்கு 5 தொடக்கம் தெற்கு 5 வரையான அகலாங்குகளுக்கு இடையே (10 இடைவெளியில்) அமைந்துள்ள வலயம்.
- இவ்வலயமானது மத்தியகோட்டு தாழ் அமுக்கவலயம், பொல் றொம்ஸ் ,அயன இடைஒருககங்கல் வலயம் (I.J.T.Z) ஆகிய பொயர்களால் அழைக்கப்படுகின்றது.
- இவ்வலயம் ஆனது வடகீழ் ,தென்கீழ் வியாபாரக்காற்றுக்களை ஒன்றையொன்று சந்திக்காதவாறு பிரிப்பபதனால் "அயனப்பிரிதளம்" எனவும் அழைக்கப்படும்
- இவ்வலயமனது உலகின் மூன்று பகுதிகளை உள்ளடகக்கியதாகக் காணப்படும்

a) பசுபிக்கின் கிழக்குக்கரையோரம்
தென் அமெரிக்கா ,வடஅமெரிக்கா ஆகியவற்றின் கிழக்கு கரைகளை உள்ளடக்கியதாக இவ் வலயம் காணப்படுகிறது.
b) ஆபிரிக்காவின் மேற்குக் கரையை உள்ளடக்கிய அத்திலாந்திக் சமுத்திரப் பகுதி
c) கிழக்காபிரிக்காக் கரை தொடக்கம் பசுபிக்கின் மேற்குக் கரையோரம் வரையான பகுதி

மேற்படி I.T.C.Z ஆனது சூரியனின் இடப் பெயர்ச்சிக்கு ஏற்ப நகர்வடையும் போக்குக் கொண்டிருக்கும்.

உ + ம் - யூன் - யூலை மாதங்களில் வடஅரைக்கோளதிலும்,
டிம்பர் - யனவரி மாதங்களில் தென்னரைக் கோளதிலும்,
காணப்படும்.

- இவ்வலயமானது காணப்படும் இடங்களில் வளியின் மேல் நோக்கிய பெயர்ச்சியானது நிலவுவதால் மேற்காவுகை ,உகைப்பு மழைவீழ்ச்சியானது மத்திய கோட்டுப்பகுதிக்கு கிடைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அயன அயல் உயரமுக்கம் வலயங்கள்

- $30^0$ - $35^0$ வரை காணப்படுகிறது (வடக்கு ,தெற்கு அகலக்கோடுகள்) உயரமுக்க வலயம் இதுவாகும்.
- இவ் உயரமுக்க வலயத்தில் இருந்து வியாபாரக் காற்றுகளும் மேலைக்காற்றுக்களும் பிரிக்கப்படுகின்றன.
- இவ் வலயங்ககளில் உயரமுக்கம் நிலவக் காரணம் வளிமண்டல பொதுச் சுற்றோட்ட நிலமைகள் ஆகும்.

## இடை வெப்பத் தாழ்முக்க வலயம்

- $60^0$ - $65^0$ வரைகாணப்படுகிறது வடக்கு, தெற்கு அகலக்கோடுகள் தாழ் அமுக்க வலயம் இதுவாகும்.
- இவ்வலயத்தை நோக்கி மேலைக் காற்றுக்கள் முனைவுக் கீழைக்காற்றுக்கள் ஆகியன ஒருங்குகின்றன.
- இவ் வலயதிதில் தாழ் அக்கம் நிலவக் காரணம் வளிமண்டல் பொதுச் சுற்றோட்ட நிலமைகள்
- இக்காற்றுககள் இவ்வலயததில் ஒள்றை யொன்று சந்திக்காதவாறு பிரிப்பதனால் இதனை “முனைவுப் பிரிதளம் “ எனவும் அழைக்க ப்படும்.
- இவ்வலயம் ஆனது மேலைக்காற்றுக்களாலும் முனைவு கீடைக்காற்றுக்கனாலும் நகர்த்தப்பட்டு “முனைவுமுகப்புகளாக மாற்றம் அடைகிறது.
- முனைவு அடுத்து காணப்படும் தாழ்முகக வலயம் ஆகையால் "முனைவு அயல் தாழமுக்க வலயம்" என அழைக்கப்படும்.

## முனைவு உயரமுக்க வலயங்கள்

- $85^0$ - $90^0$ வரை காணப்படுகிறது (முனைவைச்சுற்றி) உயரமுக்க வலயம் இதுவாகும்.
- இங்கு உயரமுக்கம் நிலவக் காரணம் அதிகமான குளிராகும். இவ்வலயத்தில் இருந்து முனைவுக் கீழைக்காற்றுக்களானது பிரிகின்றன.

இவ்வாறாகக் காணப்படுகின்ற இவ் வளிமண்டலச்சுற்றோட்டம் இன்னும் பல பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது. அவை இதில் தரப்படவில்லை இனிவரும் காலங்களில் வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேந்தலைகள்
# [OVERHEADS]

உற்ப்பத்தியில் ஏற்ப்படும் மாற்றங்களுக்கு ஏற்பகுறிப்பிட்ட செலவானது விகிதாசார ரீதியாக மாற்றமடைந்து காணப்படவில்லையாயின் அச்செல வானது மேந்தலை என அழைக்கப்படுகின்றது.

இம் மேந்தலைச் செலவுகளை பல்வேறுபட்ட அடிப்படைகளில் பாகுபடுத்திக் கொள்ளமுடிகின்றது. அவற்றில் பின்வரும் இருபிரதான பாகுபடுத்தலை இங்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம்.

1) நிறுவன தொழிற்பாடு அல்லது பணியின் அடிப்படையில்

(அ) உற்பத்தி மேந்தலை :-

உற்பத்தியுடன் தொடர்புடைய நேரில் செலவுகளை இது குறித்து நிற்கும். இச் செலவுகளானவை தொழிச் சாலை மேந்தை செலவுகளை உள்ளடக்கும்.

உ + ம் தொழிற் சாலை முகாமையாளர் சம்பளம்
தொழிற்சாலை இறை காப்புறுதி மின்சாரம்
பொறி பெறுமானத்தேய்வு

ஆ) நிர்வாகமேந்தலை :-

திட்டமிடல்,கட்டுப்படுத்தல் போன்ற முகாமைக்கருமங்கள் தொடர்பான நேரில் செலவினங்களை இது குறிக்கும் நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கான கொள்கைகளை வகுத்தல் திட்டமிடல் கட்டுப்படுத்தல் நெறிப்படுத்தல் போன்ற நேரில் செலவுகளை இதுஉள்ளடக்கும்

உ + ம் அலுவலக முகாமையாளர் சம்பளம்
அச்சிடல் எழுதுகருவி
கணக்குப் பரிசோதனைக் கட்டணம்

இ) விற்பனை வினையோக மேந்தலை

விற்பனையை தொடர்ச்சியாக அதிகரித்துச்செல்லப்படும் வாடிக்கையாளர்களை தொடர்ந்தும் தங்கள் வசம் வைத்துக் கொள்வதற்குமாக சந்தையை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செலவுகளை இது குறிக்கும் .

உ + ம் விற்பனை முகாமையாளர் சம்பளம்
விளம்பரம்,விற்பனையை மேம்படுத்தல் செலவு
விற்பனையாளர் தரகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) கூறுகளின அடிப்படையில் (elementwise classification)

அ) நேரில் மூலப்பொருள்

உற்பத்தியில் ஒரு பகுதியாகப் பராமரிக்கப் படாத மூலப்பொருட்களை நேரில் மூலப் பொருட்கள் என்பா் இவை பொறி உபகரணம் என்பவற்றைப் பராமரிப்பதற்கும் வேண்டப்படும் பொருட்களை குறிக்கும்.

உ + ம் இயந்திர உதிரிப்பாகங்கள்
காகிதாதிகள்
பராமரிப்பு மூலப்பொருட்கள்

ஆ) நேரில் கூலி

உற்ப்பத்தியுடன நேரடியான மாற்றத்தை ஏற்படும் கூலிகள் நேரில் கூலிகள் எனப்படும்.

உ + ம் மேற்பார்வையாளா் கூலிகள்
பராமரிப்பு கூலிகள்
களஞ்சியக் காப்பாளா் கூலிகள்

இ) உற்ப்பத்தியுடன் நேரடியாகத் தொடா்புபடாத நேரில் மூலப் பொருட்கள் ,நேரில் கூலிதவிா்ந்த ஏனைய நேரில் செலவுகள நேரில் பிற செலவுகளாகும்

உ + ம் தொழிற்சாலை வாடகை
காப்புறுதி

மேந்தலைகள் = நேரில் மூலப்பொருள் + நேரில் கூலி + நேரில்பிற செலவு

**மேந்தலைகள் ஒன்றுசோ்த்தல் அல்லது திரட்டுதல்**

குறிக்கப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தியின் போது ஏற்ப்பட்டுக் கொள்கின்ற நேரில் செலவுகளை ஒன்றாக திரட்டிக் கொள்ளுகின்ற ஓா் நடவடிக்கையே மேந்தலைகள திரட்டுதல் என அழைப்பா்.

மேந்தலைகளை திரட்டிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படும் மூலகங்கள்

குறிக்கப்பட்ட உற்பத்தியின் போது ஏற்ப்பட்டுக் கொள்கின்ற மேந்தலைகளை பின்வரும் மூலகங்களில் இருந்து திரட்டிக் கொள்ளலாம்

1) காசேடு
2) குறிப்பேடுப் பதிவுகள்
3) கூலிப் பகுப்பாய்வு
4) களஞ்சியப் வேண்டுதல்கள்
5) மாதிரிப் பட்டியல்கள்
6) ஏனைய பதிவேடுகளும் அறிக்கைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேந்தலைகளை ஒதுக்குதல்
## Overhead Allocation

குறிக்கப்பட்ட கிரய நிலையத்துக்கென நேரடியாக ஏற்ப்படும் மேந்தலைச் செலவுகளை அக்கிரய நிலையத்துக்கே காட்டுதல் செய்து கொள்வதை குறித்து நிற்பது மேந்தலைகளை ஒதுக்குதல் என அழைத்துக் கொள்வர்.

உ + ம் களஞ்சிய செலவினை களஞ்சியப் பகுதிக்கு சாட்டுதல் செய்தல்

உற்ப்பத்தி மேந்தலைகளை உற்பத்தி நிலையத்திகே சாட்டுதல் செய்தல்

## மேந்தலைகளை பகிர்ந்தளித்தல் அல்லது பகிர்தல்
## Apprortionment Of oyerheads

குறிக்கப்பட்ட கிரயநிலையத்துக்கென நேரடியாக ஏற்படாததும் இலகுவாக வேறுபடுத்தி அறிந்து கொள்ள முடியாததுமான பொதுவாக ஏற்படும் மேந்தலைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய பகிர்ந்தளித்தல் முறைகளில் எல்லாக் கிரய நிலையங்களுக்கும் சாட்டுதல் செய்யப்ப டுவதனை மேந்தலை பகிர்ந்தளித்தல் என்பர்.

### முதலாங் கட்டப் பகிர்வு

நிறுவனத்தில் தரட்டப்பட்ட மொத்த மேந்தலைச் செலவுகள தொடர்புடைய அனைத்து கிரய நிலையங்களுக்கிடையில பகிர்ந்தளிக்கப்படும் இம் மேந்தலைச் செலவுகள் உறப்பத்தி தினைக்களங்கள் சேவைத் தினைக்களங்கள் என்பவற்றுக்கும் பங்கீடு செய்யப்படும் இம் முதலாம் கட்டப்ப பகிர்வுக்கான அடிப்படைகள் பின் வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | மேந்தலை | பகிர்வுஅடிப்படை |
|---|---|---|
| 1 | வாடகை,இறை,காப்புறுதி கட்டிடத்தேய்வு, குளிரூட்டல் அபாயமுன்னெச்சரிக்கை,காப்புறுதிச் செலவு,ஒளியூட்டல் செலவு | இடப்பரப்பு |
| 2 | சிற்றுண்டிச்சாலை செலவு, தொழிளாலர் காப்புறுதி,பிற ஊதிய நலச் செலவுகள்,பொதுநிர்வாகம், ஆளணி மேற்ப்பார்வை, சமூகநலசேவைபாதுகாப்பு | ஊழியர் எண்ணிக்கை |
| 3 | பொறி,இயந்திரம் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு, பழுதுபார்த்தல் செலவு,பொறி காப்புறுதி | இயந்திர அல்லது உபங்கரணங்கள்ளின் புத்தகப் பெறுமதி |
| 4 | சக்திவலு, மின்சாரம் | மின் குமிழ்களின் எண்ணிக்கை |
| 5 | களஞ்சிய செலவுகள் | பொருட்களின் நிறை அல்லது பொருட்களின் பெறுமதி அல்லது பொருட்களின் அளவு |

**இரண்டாம் கட்டப் பகிர்வு**

சேவைத் தினைக்களங்களது மேந்தலை செலவுகளை மீள்பகிர்வு செய்தல்

சேலைத்தினைக்களங்களின் ஊடாக உற்பத்தி முயற்சி ஏதுவும் இடம் பெறுவது இல்லை என்பதால் உற்ப்பத்தி செலவிற்கு மொத்த அலகு களை சாட்டுதல் செய்வதற்கு ஏதுவாக சேவைத் திணைக்களங்களின் மேந்தலைகளை உற்ப்பத்தி தினைக்களங்களுக்கு மீள் பகிர்வு செய்யப்ப டுகின்றது.

இந்த இரண்டாம் கட்டப் பகிர்வுக்குரிய அடிப்படைகளாக பின்வருவன கூறப்படுகின்றன.

| சேவை துறை | பகிர்வின் அடிப்டை |
|---|---|
| 1 களஞ்சியத் துறை | a) விநியோகிக்கப்பட்ட பொருட களின் எண்ணிக்கை அல்லது பெறுமதி<br>b) பொருள் வேண்டுதல்களின் எண்ணிக்கை |
| 2 பராமரிப்பு துறை | a) வேலை செய்த நேரம்<br>b) பராமரிப்புக் கூலி |
| 3 ஆளணி தினைக்களம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
| 4 பரிசோதனை தினைக்களம் | வேலைகளின் எண்ணிக்கை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைத்தினைக்களங்களினது மேந்தலைகளை உற்ப்பத்தி தினைக்களத்திற்க்கும் மற்றைய சேலை தினைக்களங்களுக்கும் மீள்பகிர்ற செய்தல் தொடர்பாக பின்வரும் இரண்டு முறைகள் கூறப்படுகின்றன.

1) தொடர்ச்சியான பகிர்ந்தளித்தால் முறை
2) இருபடிச்சமன்பாட்டு முறை அல்லது ஒழுங்கமை சமன்பாட்டு முறை
3) நீக்கல் முறை
4) தாய முறை

உ + ம் :-வரையறுத்த "வசந்த காலப் பறவை" உற்ப்பத்தி நிறுவனம் மூன்று உற்ப்பத்தி துனைகளையும் இரண்டு சேவைத் துறைகளையும் கொண்டது, 2003 முதலாம் காலாண்டுகளுக்குரிய மேந்தலை விபரங்கள் வருமாறு.

| விபரம் | உற்ப்பத்தி துறை | | | சேவைத்துறை | |
|---|---|---|---|---|---|
| | A | B | C | X | Y |
| மேந்தலை ரூபா | 15000 | 27000 | 19000 | 2920 | 5000 |

சேவைத் திணைக்களங்களது மேந்தலைகளினை ஏனைய தினைக்களங்ளுக்கிடையில் பகிரும் விகிதம் வருமாறு

| | A | B | C | X | Y |
|---|---|---|---|---|---|
| X | 45% | 15% | 30% | ——— | 10% |
| Y | 60% | 20% | இல்லை | 20% | ——— |

பின்வரும் முறைகளில் பகிர்வு செய்வதனைக் காட்டுக.

1) தொடர்சியான பகிர்ந்தளித்தல் முறை
2) ஒருங்கினைந்த சமன்பாட்டு முறை
3) நீக்குதல் முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்சியான பகிர்ந்தளித்தல் முறையில் இரண்டாங்கட்ட பகிர்வு

| விபரம் | உற்.துறை A | உற்.துறை B | உற்.துறை C | சே.துறை X | சே.துறை Y |
|---|---|---|---|---|---|
| மேந்தலைக்கிரயம் | 15000 | 27000 | 19000 | 2920 | 5000 |
| சேவைத்துறை × மீள்பகிர்வு 9 : 3: 6 :2 | 1314 | 438 | 876 | (2920) | 292 |
| சேவைத்துறை × மீள்பகிர்வு 3 : 1 : 0: 1 | 3175 | 1058 | 00 | 1059 | (5295) |
| சேவைத்துறை × மீள்பகிர்வு 9 :3 : 6 : 2 | 476 | 158 | 317 | (1059) | 106 |
| சேவைத்துறை × மீள்பகிர்வு 3 :1 : 0 : 1 | 65 | 21 | 0 | 22 | (108) |
| சேவைத்துறை × மீள்பகிர்வு 9 : 3 : 6 : 2 | 10 | 3 | 6 | (22) | 3 |
| சேவைத்துறை × மீள்பகிர்வு 3: 1: 0: 1 | 2 | 1 | 0 | — | (3) |
| மீள்பகிர்வின் பின் மொத்தம் | 20042 | 28679 | 20199 | — | — |

தொடர்ச்சி மறுபக்கம்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

$$X = 2920 + \frac{20}{100} Y$$

$$X = 2920 + 0.2\,Y \quad \text{——————} \quad (1)$$

$$Y = 5000 + \frac{10}{100} X$$

$$Y = 5000 + 0.1\ X \quad \text{——————} \quad (2)$$

$1) \times 10 \Rightarrow 10x = 29200 + 2y$

$10x - 2y = 29200 \quad \text{——————} \quad (3)$

$2) \times 10 \Rightarrow 10y = 50000 + X$

$10y - X = 50000$

$-X + 10Y = 50000 \quad \text{——————} \quad (4)$

$(4) \times 10 \Rightarrow -10x + 100y = 500000$

$(3) + 5)\ \ 98y = 529200$

$$y = \frac{529200}{98}$$

$y = 5400$ ரூபா

$y = 5400$ ஐ சமன்பாடு (3) இல் பிரதியிடின்

$10x - 2y = 29200$

$10x - 2\ \ 5400 = 29200$

$10x - 10800 = 29200$

$10x = 29200 + 10800$

$10x = 40000$

$$10x = \frac{40000}{10}$$

$x = 4000$ ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேந்தலை மீள்பகிர்வுக் கூற்று ஒருங்கினை சமன்பாட்டு முறையில்

| | உற்ப்பத்தித்துறை | | | சேவைத்துறை | |
|---|---|---|---|---|---|
| விபரம் | A | B | C | X | Y |
| மேந்தலை | 15000 | 27000 | 19000 | 2920 | 5000 |
| x மீள்பகிர்வு | 1800 | 600 | 1200 | (4000) | 406 |
| y மீள்பகிர்வு | 3240 | 1080 | இல்லை | 1800 | (5400) |
| மீள்பகிர்வின் பின் மொத்தம் | 20040 | 28680 | 20200 | — | — |

மேந்தலை மீள்பகிர்வுக் கூற்று (நீக்குதல் முறையில்)

| | உற்ப்பத்தித்துறை | | | சேவைத்துறை | |
|---|---|---|---|---|---|
| விபரம் | A | B | C | X | Y |
| மேந்தலைகிரயம் | 15000 | 27000 | 19000 | 2920 | 5000 |
| y மீள்பகிர்வு 3 : 1: 0 : 1 | 3000 | 1000 | 00 | 1000 | (5000) |
| x மீள்பகிர்வு 9 :3 :6 | 1960 | 653 | 1307 | (3920) | — |
| மீள்பகிர்வின் பின் மொத்தம் | 19960 | 28653 | 20307 | — | — |

**மேந்தலைகளை உறிங்சுதல் அல்லது உள்ளடக்குதல்**

உற்ப்பத்திச் செலவு நிலையங்களுக்கு எற்ப்படும் மேந்தலைச் செலவுகளை அதனூடாக உற்ப்பத்தி செய்யப்பட்ட எல்லா அலகுகளுக்கும் இடையில் சாட்டுதல் செய்து கொள்ளப்படுவதனை மேந்தலை உறிங்சுதல் அல்லது உள்ளடக்ப்படுதல் என்பர்

மேந்தலை உறிஞ்சுதல் அல்லது உள்ளடக்குதல் முறைகளாக பின்வரும் 6 முறைகள் குறிப்பிடப்படுகின்றன

1) உற்பபத்தி அலகு முறை

$$\frac{\text{பாதீடு செய்யப்பட்ட மேந்தலை}}{\text{பாதீடு செய்யப்பட்ட உற்ப்பத்தி அலகு}}$$

2) இயந்தர மணி வீதமுறை

$$\frac{\text{பாதீடு செய்யபபட்ட மேந்தலை}}{\text{பாதீடு செய்யப்பட்ட இயந்திர மணித்தியாளம்}}$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) ஊழிய மணி வீத முறை

$$\frac{\text{பாதீடு செய்யபபட்ட மேந்தலை}}{\text{பாதீடு செய்யப்பட்ட ஊழிய மணித்தியாளம்}}$$

4) மூலப்பொருள் செலவின் விகிதாசார முறை

$$\frac{\text{பாதீடு செய்யப்பட்ட மேந்தலை}}{\text{பாதீடு செய்யப்பட்ட மூலப்பொருள்}} \times 100$$

5) நேர் கூலிச்செலவின் விகிதாசார முறை

$$\frac{\text{பாதீடு செய்யப்பட்ட மேந்தலை}}{\text{பாதீடு செய்யப்பட்ட நேர் கூலிச் செலவு}} \times 100$$

6) மூலச் செலவின் விகிதாசார முறை

$$\frac{\text{பாதீடு செய்யப்படட மேந்தலை}}{\text{பாதீடு செய்யப்பட்ட மூலச் செலவு}} \times 100$$

ஆக்கம்
ஆசிரியர் **S -** தவா
B.com (Hons)( Acc - Spl)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# இந்துக்களின் பொருளாதாரம்

இந்துக்களின் பொருளாதாரம், பொருளியற் கோட்பாடு பற்றி சிந்திக்கும போது முதல் வரலாற்றுக் காலமாகிய வேதகாலத்திலேயே பொருள் பொருளாதாரம் பொருளாதார விருத்தி பற்றி சிந்தித்திருக் கின்றார்கள். Dr. இராதாகிருஷ்ணனின் கருத்துப்படி "இந்துக்கள் வெறுமனே முத்தி, துறவுவாழ்க்கை பற்றிச் சிந்திக்காது இவ்வுலக வாழ்க்கை பற்றியும் சிந்திக்கின்றனர்" என்கிறார். வேதகாலத்தில் இயற்கைச் சக்திகளை வழிபாடு செய்யும்போது "நீண்ட ஆயுளைத்தா, நிறைந்த செல்வத்தைத்தா" என்ற வாசகங்கள் அக்கால பொருளாதார விருத்தியை சிறப்புப்படுத்தியிருக்கின்றது. பொருளாதாரத்தை வளர்ப்பதற்காக வைசிகன் என்ற வர்ணத்தை நியமித்தார்கள். இவர்கள் விவசாயம், வர்த்தகம் போன்றவற்றை மேம்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொண்டனர்.

மக்கள் தங்களுடைய ஊதியத்திலிருந்து 1/6 பங்கை தானமாக அரசனுக்குக் கொடுத்தனர். இதனால் அரசன் பொருளாதார வளம் மிக்கவனாக திகழ்ந்தான். குற்றங்கள் செய்வோருக்கு தண்டப்பணம் அறவிடல் பிராமணர்களுக்கு தானம் கொடுத்தல் எல்லாவற்றுக்கும் பசுவைப் பயன்படுத்தினர். குருகுலக் கல்வியில் இறுதிக்காலத்தில் குருவுக்குத் தெட்சணை வளங்கப்பட்டது. இவ்வாறான நிகழ்வுகள் வாழ்க்கையில் பொருள் அவசியம் தேவைப்பட்டிருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

## அர்த்த சாஸ்திரம் கூறும் பொருளாதாரக் கோட்பாடுகள்

அர்த்தம் என்பதன் பொருள் பொருளே. பொருளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் பற்றிப் பேசுவதால் இந்நூல் அர்த்தசாஸ்த்திரம் என அழைக்கப்படுகிறது. அதாவது அரசை பொருள் முதல்வாத அடிப்படையில் நோக்கப்படுகிறது.

மௌரிய அரசர் காலத்தில் சந்திரகுப்த மன்னனுக்கு முதல் அமைச்சனாக இருந்த கௌடில்யன் (சாணாக்கியன்) இந்நூலை எழுதினார். அரசியலில் இருந்த காரணத்தினால் இந்நூல் அரச சார்பாக எழுதப்பட்டது எனப் பொருள் கூறுவர். இந்நூலில் 5ஆம் அதிகாரம் திறைசேரி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு அரசனுக்கு பொருள் சேர்க்கும் வழிவகைகள் சிறப்பாகப் பேசப்படுகிறது.

கௌடில்யர் வேதகாலத்தில் விரும்பிக் கொடுத்த 1/6 பங்கு வரியை கௌடில்யர் கட்டாயம் கட்டவேண்டும் என்கிறார். மேலும் விளைச்சல் விளைச்சல் கூடிய நிலங்களுக்கு இதில் 1/4 பங்காக அதிகரிக்கப்பட வேண்டும என்கிறார். சாலை வரி, சோலை வரி என வேறுபட்ட பல வரிகளை எடுத்துக் கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளங்கள் அரசுக்குச் சொந்தமானவை. தனிப்பட்ட எவரும் இதை அபகரிக்க முடியாது என்கிறார். கடல் வளம், காட்டுவளம், உப்பளம், சுரங்கத்துறை போன்றவை அரசினால் நிர்வகிக்கப்பட வேண்டும். இதற்கென தனித்தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

விவசாயம் செய்பவர்கள், வர்த்தகம் செய்பவர்களை அரசு ஊக்குவிக்க வேண்டும். உள்நாட்டு வர்த்தகம் மட்டுமன்றி வெளிநாட்டு வர்த்தகத்தையும் எவரும் மேற்கொள்ளலாம் ஆனால் இவற்றிற்கு இலாபம் குறிக்கப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டது. வெளிநாட்டுப் பொருட்களுக்கு 10% இலாபமும், உள்நாட்டுப் பொருட்களுக்கு 5% இலாபமும் அறவிடலாம். எனக் கூறுகின்றார். மேலும் வெளிநாட்டிலே வர்த்தகம் செய்பவர்களுக்கு நஷ்டம் ஏற்படும் வேளையில் அவற்றை ஈடுசெய்யும் வகையில் காப்புறுதித் திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறார்.

முதலாளி வர்க்கத்தினர்கள் பொருளாதார வளத்தை மேம்படுத்தும் அதேவேளையில் தொழிலாளர்கள் நலன் பேணப்படவேண்டியது. அவசியமானது. தொழிலாளர்களது சம்பளம், உரிமைகளை நிலைநாட்டுவதற்கு அவர்களைக் கண்காணிக்கும் அதிகாரி ஒருவர் நியமிக்கவேண்டும் என்கிறார்.

பல்வேறு வகையாலும் பொருள் சேர்த்துக்கொண்ட மன்னவன் நாட்டின் நலன் பற்றியும் சிந்திக்க வேண்டும். விதவைகள் அனாதைகளின் நாட்டிலே வாழ்ந்தால் அவற்றைப் பேணவேண்டிய பொறுப்பு அரசிற்குரியது, ஏழைகள், அனாதைகள் வாழ்க்கையை பேணுதல் வேண்டும். அனாதைகள் இறந்துகிடந்தால் அவர்களது உடலை அரசே எடுத்து தகனம் செய்தல் வேண்டும். இது மட்டுமன்றி இயற்கைகளினால் அழிவு ஏற்படின் அவற்றை ஈடுசெய்யும் வகையில் அழிவுக்குட்பட்டவருக்கு நிவாரணம் வழங்கவேண்டும். என்றும் கூறுகின்றார். இது மட்டுமன்றி ஆலயங்கள் பொது நிறுவனங்கள் தரிசு நிலங்கள் போன்றவற்றுக்கு வரி விலக்குச் சலுகையும் அளிக்க வேண்டும் என்கிறார்.

அரச அங்கத்தவர் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு அதிகாரியையோ மற்றும் அலுவலகரையோ ஓரிடத்தில் அதிக காலம் வேலைக்கு அமர்த்தக் கூடாது. அடிக்கடி இவர்களை இடமாற்றம் செய்யவேண்டும். அப்பொழுது தான் ஊழலை தடுக்க முடியும் என்றார்.

வேதகாலத்தில் அரசனது ஆட்சி கொடுங்கோன்மையாக மாறினால் மக்கள் புரட்சி செய்து அரசனை நீக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் கௌடில்யர் இதை மறுத்து அரசுக்கெதிராக தொழிற்படுபவர் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவர் எனப் புரட்சியை எதிர்த்து அரசை முடியாட்சியாக்கி அரசனின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகக்கிறார்.

இவ்வாறு அர்த்த சாஸ்திரம் கூறுவதோடு மகா பாரதம் இராமாயணம் திருக்குறள் போன்ற நூல்களும் பொருளாதாரத்தின் அவசியம் பற்றிப் பேசுகின்றது. திருவள்ளுவர் இந்த உலகத்தில் வாழ்பவர்களுக்கு பொருளாதாரம் மிகமிக அவசியமானது என்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லைப்போல்
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

பல்லவர் காலத்தில்கூட சம்பந்தரும் அப்பரும் திருவிழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்ட வேளையில் சிவபெருமானிடம் படிக்காசு பெற்று பஞ்சம்போக்கியமை சுந்தரர் சிவனிடம் முறையிட்டு நெல்லுப்பெற்றமை, பொன் பெற்றமை மணிவாசகர் 1008 களஞ்சு பொன்னையும் குருந்தமர நிழலில் இருந்த சிவனடியார்பால் செலவு செய்தமை செம்மனச்செல்வியிடம் சிவன் பிட்டுக்காக மண்சுமந்தமை எல்லாம் இந்துக்களது வாழ்க்கையில் பொருளாதாரம் அவசியம் என்பதை உணர்த்தி நிற்கின்றதல்லவா.

சுபம்

**ஆசிரியர், இராமநாதன் கல்லூரி,**
**அமைப்பாளர் மாவைசிவநாதம்**
**பட்டிமன்றக்குழு**

**அருட்சொல்வாரி, சைவப்புலவர்**
**சைவசித்தாந்த பண்டிதர்**
**செ.கந்த சத்தியதாசன்**
B.A.(Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலித்தொகையில் நாடகப்பண்புகள்

கலிப்பாவின் அமைப்பும் கலித்தொகைப் பாடல்கள் சிலவற்றின் பொருளமைதியும், புராதன தமிழ் நாடகத்தின் உருவும் பொருளும் பற்றி அறிய உதவுகின்றன.

கலியின் துள்ளல் ஓசை ஆட்டத்துடன் சம்பந்தப்பட்டதாகும். கலி, அகவல், வஞ்சி, வெண்பா, என்ற பாவகைகளுள் கலி முக்கியமானது. தொல்காப்பியர் நான்குவகையான கலிப்பாவைக் கூறுகின்றார். 1) ஒத்தாழிசை, 2) கலிவெண்பா, 3) கொச்சகக்கவி, 4) உறழ்கலி.

கவியின் அமைப்பு ஆட்டத்திற்குரியது. பொதுவாகக் கலி என்பது கலிப்பாடலாகும். இதில் தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம் என்ற பகுதிகள் உள்ளன. தரவு என்பது பாடலிற் கூறப்படும் பொருளை எடுத்துக் கூறுவதாகும். சுரிதகம் அப்பாடலின் இறுதியில் வருவது. இது சுழன்று வருவது என்ற கருத்தைத்தரும். தரவு பாடலின் பொருளைக் கூறும் சுரிதகம் சுழன்று ஆடிமுடிப்பதாகும். இடையில் வரும் இடைநிலைப் பாட்டு (தாழிசை) என்பது தரவிற் கூறப்பட்ட விடயங்களை விளக்கமாகக் கூறுவது. தாழிசை என்னும்பொழுது இங்கு இசை தாழ்ந்து வருவதாகும். இதனால் கூறப்படும் பொருள் குன்றாது அமைகிறது. தாழிசையில் இசை கீழிருக்கச் சொல் மேலிருக்கும்.

கலியின் ஒரு கூறாகக் கொச்சகம் காணப்படுகிறது. ஆட்டத்தில் பாட்டின் உயிர் கொச்சகத்தில் தான் நிற்கும். கானல் வரியில் அதே வரி திரும்பத்திரும்ப வருவது கொச்சகமே. நாட்டுக்கூத்தில் கொச்சகம் என்பதை ஆடலோடு பாடப்படுவது என்பர். மார்க்கண்டன், வாளபிமன் நாடகங்களில் இதனைக் காணலாம். உரையாசிரியர் இளம்பூரணர் தரவு தாழிசை, தனிச்சொல், சுரிதகம் முதலிய அம்சங்களைக் கொச்சகக்கவி கொண்டது எனவும் அதாவது மடித்துமடித்து ஆடும் மரபாதல் வேண்டும் என்றும் கூறுகிறார். கவியில் 'சொற்சீரடி' என ஒன்றுண்டு. இது கவிப்பாடலில் உரையும் உரையும் வரும் என்பதைக் காட்டுகின்றது. இது நாடகத்தின் அம்சமாகும்.

தனிச் சொல் என்பது இடைநிலைப் பாட்டைச் சுரிதகத்தோடு இணைப்பது. (உ+ம்) 'எனவாங்கு'. உறழ்கவி கூற்றும் மாற்றமும் இடையிடை இணைந்து வருவதாகும். கலித்தொகையில் பெருமளவு உறழ்கவிப்பாடல்கள் உண்டு.

**யாரிவனெங் கூந்தல் கொள்வானிதுவுமோ**
**நுராண்மைக் கொத்த படிநுடைத் தெம்மனை**
**வாரனீ வந்தாங்கே மாறு;**
**என்னிவை, ஒருயிர்ப்புள்ளி நிருதலை யுள்ளொன்று**
**போரெதிர்ந் தற்றாப் புலவனீ கூறினென்**
**னருயிர் நிற்குமா றியாது; ............ (மரு கவி 89)**

எனவே கவிப்பாடலின் அமைப்புமுறை நாடகப்பாணியில் அமைந்துள்ளமை தெரியவருகிறது. கலித்தொகையை வைத்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும்போது இது மேலும் தெளிவாகின்றது.

கலித்தொகை, அன்பினைந்திணை நூல்களில் ஒன்றாயிருப்பினும் விரசமான பல பாடல்களையே கொண்டுள்ளது. அன்பினைந்திணைப் பாரம்பரியத்தில் விரசமான பாடல்கள் வருவதில்லை. இப்பாடல்கள் காமக் கேளிக்கையை உணர்த்துவன. இத்தகைய பாடல்கள் ஏதோ ஒரு அவைக்காற்று நிகழ்ச்சியிலுருவானவை.

கலி 81ஆம் பாடல் ஏனாதிப்பாடியதில் பரத்தையர் வருவோரை ஆடிவரவேற்கும் முறை இருந்தமை தெரிகிறது. இது உண்மையான நாடகம் எனலாம்.

ஒருஉ நீயெங் கூந்தல் ......... (கலி 87) ஒருஉக் கொடியியல் நல்லார் (கலி 88) யாரிவன் என் கூந்தல் (கலி 89) போன்ற பாடல்களில் உரையாடல் தன்மை காணப்படுகின்றது. இதன் மூலம் நாடக நிகழ்வுகள் இருப்பதாகக் கொள்ள வேண்டியுள்ளது. பாலினிடையே உரைப்பகுதிவரும் இந்தப் பாடல்களில் நாடகத் தன்மை மிகத் துல்லியமாகத் தெரிகிறது.

அழகுள்ள ஒருபெண் ஒரேவேளையில் பல பாத்திரங்களாக ஆடிக்காண்பிக்கும் மரபு வளர்ந்து வந்ததால் பொதுப்படையான நாடகமரபு வளரமுடியாது போனது. இம்மரபு கி.பி. 250இன்பின் உயர்மட்டத்தினரின் இரசனைக்காகவும், கேளிக்கைக்காகவும் தோன்றுகின்ற ஒருநாடகமரபு. இது காமச் சுவையுடன் சேர்ந்து வளர்கிறது. கலி என்ற பாவடிவமே இத்தகைய ஆட்டமரபுக்கு அடிப்படையாக அமைந்தது என்பதை எடுத்துக்காட்டுகிறது. இதைத்தொடர்ந்து கலிப்பாவின் பகுதிகள் ஆட்ட மரபுகளைக் காட்டுகின்றன. அவற்றில் தலைவன் தலைவி அல்லது காதலர் இருவர் இன்பமாக இணையும் காட்சிகள் உள்ளன. கவித்தொகை முழுவதிலும் காமச்சுவையே மேல்நிற்கின்றது. காமக்கேளிக்கையுடன் நாடகப் பண்பும் உள்ளது. கவித்தொகையின் யாப்பமைதியைப் பார்க்கும் போது இத்தகைய ஆடல்பாடல்களில் பெண் காமக்குறிப்புடன் ஆடும் ஆடல்மரபு தமிழ் நாட்டில் நிலவியது எனலாம். அக்கால பிரபுத்துவ வட்டத்தில் இத்தகைய ஆட்டமரபு கேளிக்கையாக அமைந்தது என்பது தவறாகாது. பார்ப்போரது காம இச்சையைப் பூர்த்தி செய்கின்றதொரு ஆட்டமுறையில் ஆடுகின்ற பெண்களின் ஆளுமை, கவர்ச்சி என்பன முதலீடாக அமைகிறது. இதனால் காமச்சுவையைக் காட்டும் ஆடல் மரபு பிரபுத்துவ மட்டத்தில் வளர்ந்தது என்பது தெரிகிறது. கவித்தொகையின் மூலமாக உயர் மட்டத்தில் காமச் சுவையை மிகுதியாகக் கொண்ட ஒரு கலைப் பாரம்பரியம் வளர்ச்சியுற்றுக் காணப்பட்டது.

கலிப்பாவை ஆராய்ந்துபார்த்தால் அது நாட்டியத்துடனும் நெருங்கிய தொடர்புடையது என்பது புலனாகும். தனிச்சொல் நடுப்பகுதியைச் சுரிதகத்தோடு அமைப்பிலும் பொருளிலும் இணைக்கிறது. ஆகையால் கலிப்பாவின் அமைப்பு அது நாடகத்தோடு தொடர்புடையது என்பதைக் காட்டுகின்றது. தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள கலிப்பாவகைகளை ஆராய்ந்து பார்த்தால் இப்பாவகை நாடகத்தோடு தொடர்புடையது என்பது புலப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலித்தொகைப் பாடல்களின் தன்மை அவற்றை வாசிப்பவனுக்காக எழுதப்பட்டவை எனபதைக் காட்டவில்லை. பாக்களிற் காணப்படும் இசையினாலும் இடையிடையே வரும் செய்கைகளினாலும் அவை பாடஞ்செய்து ஒப்பித்தலுக்காக இயற்றப்பட்டன என்பதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகவே அவை பாட்டையும் செயலையும் ஒன்று சேர்த்துச் செய்யப்படும் செய்கை போலத் தோன்றுகின்றது. "கலிப்பாடல்கள் சில யாரோ பார்ப்பதற்கு Perform பண்ணப்பட்டவையாக காணப்படுகின்றன" என்று பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி அவர்கள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

கலி 88லீ உரைநடையில் ஒருவன் கூறுகின்றான்.

**"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து"**

**"நல்லாய் கேள்"**

இங்கே உரைநடையில் வரும் அடி நாடகத்தின் முக்கிய செயலாகத் தொழிற்படுவதைக் காணலாம். கலி 56ல் காணப்படும் உரைநடையின் உபயோகம் நாட்டுக்கூத்தில் உரைநடையின் தொழிலை நினைவூட்டுகின்றது.

கலி 114இல் வெள்ளைக் கொச்சகம் என்று வருணிக்கும் பாவகையில் ஒருபாடல்.

**"சென்று யான் அறிவேன் கூறுக மற்றினி"**

இதில் ஒரு ஆயர்குலப் பெண்ணொருத்தி தனது தோழியைத் தன்காதல னிடம் சென்று ஒரு சிறுபிள்ளை போலக் காத்திராது திருமணத்திற்கு ஏற் பாடு செய்யும்படி தூண்டுமாறு சொல்கிறாள். அதற்குத் தோழி மேற்கண்ட வாறு கூறுகிறாள்.

மேற்கூறியவை அச்செய்யுள் அடிப்படையில் நாடகப் பண்புகள் கொண் டுள்ளவை எனக் காட்டுவதற்குப் போதுமானவை. கலித்தொகைப் பாட்டுக் களுட் பெரும்பாலானவை பொழுதுபோக்கிற்காக அமைந்த பாடல்கள் மிகவும் கவர்ச்சியானவை. உயர்குலத்தினரின் பொழுதுபோக்குக்காக காட்டப்படும் ஒருவகை நடிப்பாகக் கவிப்பாக்கள் இருந்திருக்கக் கூடுமெனத் தோன்றுகின்றது. கலித்தொகைப் பாக்களின் அமைப்பும் பொருளும் ஏனைய பிற சான்றுகளும் இக்காலத்தில் காதலைப் பொருளாகக் கொண்ட ஒருவகைப் பொழுதுபோக்கு நாடகங்கள் எழுந்திருக்கக் கூடுமென்ற முடிவுக்கு எம்மை இட்டுச் செல்கின்றன. நடனமாடும் பரத்தையரால் பிரபுக்களின் பொழுபோக்குக்காக இவை நடிக்கப்பட்டன.

இவ்வாறு கலித்தொகை எனும் சங்க இலக்கியம் தமிழ் மக்களின் சிறந்தவொரு நாடக இலக்கிய நூலாகவும் தமிழ்நாட்டின் ஊற்றுக்களை, ஓட்டங்களை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுவதாகவுமிருக்கின்றது.

**திருமதி.சி.கிருபாகரன்**
B.A (Hons.),Dip in Edu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூறு கூறும் வேந்தர் வள்ளன்மை

(கலைவாணி மகாலிங்கசிவம்) B.A. (Hons.)

சங்ககாலத்துத் தமிழ்ப்புலவர்கள் பாடிய இலக்கியங்கள் அகப்பொருள் இலக்கியங்கள் என்றும், புறப்பொருள் இலக்கியங்கள் என்றும் இருபெரும் பிரிவுகளில் வகுக்கப்பட்டுள்ளன.

இளைஞர் மங்கையரிடையே தத்தம் மனங்களுள் மட்டும் உணரவும், மகிழவும், கவலவும், கலங்கவும் உரித்தான காதல் உணர்வுகளை பட்டறிவு களை, களவியல், கற்பியல் என்னும் வகைகளுள் ஒன்றாக, முதல் கரு, உரிப்பொருள்கள் பொருத்தமுற அமைய, கவிமாந்தர் பெயர் சுட்டாதனவாக தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய், நற்றாய் அவர்களில் ஒருவர் கூற்றாகப் பாடப்பட்ட பாடல்கள் சுகப்பாடல்களாக ஏற்கப்பட்டன. இத்தகைய காதல் தவிர்ந்த ஏனைய பாடல்கள் எல்லாம் புறப்பொருள் இலக்கியங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய புறப்பாடல்களுள் நானூறு சிறு செய் யுள்கள் புறநானூறு என்ற பெயரில் பிற்காலத்துப் புலவர்களால் தொகுக்கப்பட்டன.

இப்புறநானூறுப் பாடல்கள் தமிழ் வேந்தர்களின் வீரம், போர்கள், கொடைச்சிறப்பு, ஆட்சிமுறை, சமூகவாழ்வுமுறை, சமூகப்பண்பாடு, செங்கோன்மை, கலைகல்வி வளர்ச்சி, என்பவற்றை நொச்சி, வஞ்சி, வெட்சி, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்னும் புறத்திணைகளில் வைத்துப் பாடப்பட்டவை.

2000 ஆண்டின் மேலாக உயிர்வாழ்ந்து ஒளிபரப்பும் பாடல்கள் நூற்றுக்கணக்கில் குறுகிய உதிரிக் கவிதைகளாகவும் மதுரைக்காஞ்சி போன்ற நெடும்பாட்டுகளாகவும், உதிப்பதற்கு உந்து சக்தியாக விளங்கியது. பொதுவாக அக்கால அரசியல் துறையினதும், சமூக வாழ்வினதும் மேம்பாடே! ஆயினும் புலவர்களுடன் ஒட்டிப் பிறந்த வறுமையை வென்று அவர்கள் உயிர்வாழ்ந்து இலக்கியம் படைக்கவைத்து, அக்கால வேந்தர்கள் அப்புலவர்களுக்கு பொன்னும், பொருளும் பரிசளித்து ஆதரித்த வள்ளன்மையே என்பது மிகையன்று.

அத்தகைய அரச வள்ளன்மை பற்றேயே, பல அரசர்கள் வள்ளல்களாக வரிசைப்படுத்தப்பட்டனர். இவ்வகையில் கடையெழு வள்ளல்களாக பாரியும், ஓரியும், காரியும், எழினியும், பேகனும், ஆயும், நள்ளியும் என்னும் கொடை சிறந்த வேந்தர்கள் போற்றப்பட்டனர். இவ்விபரத்தை குமணவள்ளலை பெருஞ்சித்திரனார். பாடிய "முரசு கடிப்பு— என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல் கொண்டு விளக்குகின்றார்.

இவர்களுள் ஒப்புயர்வற்ற வள்ளல் பாரியின் கொடைச்சிறப்பை சங்ககாலத் தலைமைப் புலவரெனக் கொள்ளப்படும் கபிலர்,

"பாரிபாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப்புலவர்!
பாரியொருவனு மல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மாரியின் வள்ளன்மைக்கு அக்காலத்து வாங்கும் சாக்கில் அவ்வேள் பாரியின் கொடைச்சிறப்பை உச்சமாக ஏத்தியுள்ளார்.

அதியமான் நெடுமான் அஞ்சி என்ற வேந்தன் தான் முனைந்து பெற்ற நெல்லிக்கனியை - அதை உண்டவர் நீண்ட காலம் வாழ்வர் என்ற உண்மையை உணர்ந்து அதைத் தானே உண்டு நீண்டகாலம் வாழ்வதைவிட, தமிழின் ஊற்றாக விளங்கும் ஔவையார் உண்டு நீண்டகாலம் உயிர்வாழ்வது தமிழுக்கு நிறையக் கவிதைகள் கிடைக்க வழிவகுக்கும் எனக்கண்டு ஔவையாருக்கே அக்கனியை உண்ணும்படி வழங்கினான். இந்தக் கொடையின் மேம்பாட்டால் உள்ளம் நெக்குருகிச் சிலிர்த்த ஔவையார்.

**"அஞ்சி!**
**பால்புரை பிறைநுதற்கு பொலிந்த சென்னி**
**நீலமணிமிடற் றொருவன் போல**
**மன்னுக ..........**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**
**ஆதல் நின் கைத்தடக்கிக்**
**சாதல் நீங்க எமக்கீந்தனையே"**

என்று பாடிய பாடல் ஒன்று புறநானூற்றின் கண் உள்ளது.
இதே அதியமானின் கொடைச்சிறப்பினை,
**"ஒருநாட் செல்லலம் இருநாட் செல்லலம்**
**பலநாள் பயின்று பலரொடு செலினும்**
**தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ!**

என்ற தொடக்கமுடைய பாடலில் எத்தனை தடவை ஒரு புலவன் தன்னிடம் இரக்கச் சென்றாலும் அத்தனை தடவையும் முதற்தடவையாக வருபவனுக்கான இன்முக வரவேற்பையே. வழங்கிப் பரிசில் ஈவான் அதியடிகன் என்று கூறுவதோடு யானையின் கொம்புகளுக்கிடையே வைத்த சோற்றுக்கவளம் எப்படி அதற்கு உறுதியாக உரியதோ அத்துணை நிச்சயமானது. அதியமானிடம்இருந்து இரக்கவந்த புலவருக்கான பரிசில் எனப் புதிய உவமை கூட்டி,
**"யானை தன் கோட்டிடைவைத்த**
**கவளம் போலக் கையகத்தது. அது பொய்யாகாது."**
என்று பாடியுள்ளார். இது போலவே சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய கோவூர்கிழார், "தேஎந்தீந் தொடைச் சீறியாழ்ப்பாண" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாட்டில் பாணனைப் பார்த்து கிள்ளிவளவனிடம் உன் துணைவி
**"இன்னகை விறலியொடு மெல்மெல இயலிச்**
**செல்வையாயிற் செல்வை யாகுவை!**
**விறகொய் மாக்கள் பொன் பெற்றன்னதோர்**
**தலைப்பாடன்று அவன் ஈகை"**
என்று விறகு ஒடிக்கக்காடு சென்றவர்கள் அங்கு தற்செயலாகப் புதையல் பெறுவது போன்று தற்செயலாக நிகழ்வதன்று நீ அவனிடம் பரிசில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. திருமதி ஆ.சிவஞானசுந்தரம். அதிபர் B.A.(Hons.) Dip.in.Edu S.L.P.S.I
02. திருமதி ப.தியாகலிங்கம். விசேட பயிற்சி (தமிழ்)
03. திரு வ.பாலேந்திரன். விசேட பயிற்சி (கணிதம்)
04. திருமதி உ.நடராசா B.A.Dip in Edu.
05. திருமதி வி.ஜெயரூபன் ஆரம்பப்பயிற்சி பகுதித்தலைவர் (ஆரம்பப்பிரிவு)
06. திருமதி க.லிங்கேஸ்வரன் விசேடபயிற்சி (விவசாயம்)
07. திருமதி ந.சிவராஜன் B.A. பகுதித்தலைவர் (6-8)
08. திருமதி ப.கேசவன் விசேடபயிற்சி (ஆங்கிலம்) பகுதித்தலைவர் (12,13)
09. திருமதி சி.கந்தசாமி விசேடபயிற்சி (கணிதம்) புகுதித்தலைவர் (9,10,11)
10. திரு. ம.கோபாலகிருஷ்ணன் B.Sc. Dip in Edu.
11. திரு. கா.சாந்திநாதன் B.BA. (Hons.) Dip in Edu.
12. திருமதி கி.செல்வராஜன் ஆரம்ப பயிற்சி
13. திருமதி தே.பாலகிருஷ்ணோஸ்வரன் விசேட பயிற்சி (விஞ்ஞானம்)
14. செல்வி சி.வேலும்மயிலும் B.Sc. Dip. in Edu.
15. செல்வி இ.விஜயரட்ணம் B.A.
16. திருமதி சி.தர்மராஜா விசேட பயிற்சி (கணிதம்)
17. திருமதி சு.சீனிவாசகம் B.A. (Hons.) Dip. in Edu.
18. திருமதி செ.சரத்சந்திரன் B.Sc.(Hons.) Dip. in Edu.
19. திருமதி தே.யோகராஜா B.A. Dip. in Edu.
20. திருமதி கே.ஆனந்தரட்ணம் B.A.(Hons)Dip. in Edu.
21. திருமதி நி.அருமைநாதன் விசேட பயிற்சி (சித்திரம்)
22. திருமதி இ.சோமஸ்கந்தமூர்த்தி B.A. Dip. in Edu. H.N.D.A.
23. திருமதி ஜெ.சந்திரசிறி B.Com. ஆரம்பப் பயிற்சி
24. செல்வி சா.சௌந்தரநாயகம் விசேட பயிற்சி B.A. (விஞ்ஞானம்)
25. திருமதி பா.சிவன்சேய் B.A.
26. திருமதி கோ.குலபாலசிங்கம் விசேட பயிற்சி (உடற்கல்வி)
27. திருமதி உ.சிவகுமார் B.A.
28. திருமதி பி.கிரிதரன் B.A.
29. திரு. வீ.ராம்குமார் B.Sc
30. திரு. தே.திருமுருகராஜன் விசேடபயிற்சி (வர்த்தகம்) முகாமைத்துவ டிப்புளோமா
31. திருமதி பு.கனகலிங்கம் விசேட பயிற்சி (மனையியல்)
32. திருமதி க.மகாலிங்கசிவம் B.A. (Hons.) Dip. in Edu.
33. திரு. தே.புலேந்திரன் B.Sc
34. செல்வி நீ.விஜயராஜா B.Com.
35. திருமதி சு.யோகராஜா B.A. Dip. in Edu. M.Ed.
36. திருமதி சி.கிருபாகரன் B.A. (Hons) Dip. in Edu.
37. திருமதி அ.குகதாசன் Dip. in Music
38. திருமதி பொன்.குணரத்தினம் Dip. in musi.
39. திரு. சத்தியதாசன் B.A. (Hons) Dip. in Edu. விசேட பயிற்சி (விஞ்ஞானம்)
40. திருமதி E.R.ஜெபநாயகம் விசேட பயிற்சி (ஆங்கிலம்)
41. திருமதி ஜெ.சக்திதரன் ஆரம்பபயிற்சி B.A.
42. செல்வி இ.இராமலிங்கம் ஆரம்பப்பயிற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் நன்றிக்குரிய நெஞ்சங்கள்

- மலர் சிறப்பற ஆசிகளை வழங்கிச் சிறப்பித்த பெரியோர்களுக்கும்

- ஆக்கமும் ஊக்கமும் தந்து மலர் வெளியிட பலவிதமான வழிகளிலும் நின்று உதவி புரிந்த எமது அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் அவர்கட்கும்.

- இம்மலரின் நறுமணமும் உறுபயனும் மிக்கதாய் வெளிவர விடய தானங்களை வழங்கிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும்

- மலர் வெளியீடு தொடர்பாக ஆலோசனைகளையும் அறிவுரை களையும் வழங்கி எமக்கு உற்சாகமளித்த மன்றப் பொறுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களிற்கும்.

- மலர் வெளியீட்டு விழாவில் ஆசியுரை, சிறப்புரை, சமர்ப்பண உரை வழங்கிய பெரியோர்களுக்கும்

- தேவையான போதெல்லாம் இன்முகத்துடன் முன்வந்து நல் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி உதவிய ஆசிரியர் திரு T. திருமுருகராஜன் அவர்கட்கும்

- முதற்பிரதி, சிறப்புப்பிரதிகளைப் பெற்று எம்மன்றத்தினரை ஊக்கு வித்த நலன் விரும்பிகளிற்கும்

- விளம்பரங்களைத் தந்து எமது நூல் வெளியீட்டிற்கு உதவி புரிந்த வர்த்தகப் பெருமக்களிற்கும்.

- இத்தளிரை சிறப்புடன் அச்சிட்ட திகழ் பிறிண்டேர்ஸ், கபிலன் பிறிண்டேர்ஸ் ற்கும்.

- எமது அழைப்பை ஏற்று இம்மலர் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்த ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களிற்கும்

- ஈற்றில் எமது அழைப்பை ஏற்று விழாவை மேம்படுத்திய எம் கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும்

**“எமது மனமார்ந்த நன்றிகள்”**

**உயர்தர மாணவர் மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் மன்றச் செயற்குழு

காப்பாளர் :- திருமதி A. சிவஞானசுந்தரம்

துணைக்காப்பாளர் :- திருமதி P. தியாகலிங்கம்

மன்றப் பொறுப்பாசிரியர் :- திருமதி S. சீனிவாசகம்

தலைவர் :- செல்வி M. வினோஜினி

உபதலைவர் :- செல்வி V. இன்பநிதி

செயலாளர் :- செல்வி K. வித்யா

உபசெயலாளர் :- செல்வி T. குமுதினி

பொருளாளர் :- செல்வி T. ஜெனனி

இதழாசிரியர் :- செல்வி S. அனுஷா

செயற்குழு உறுப்பினர் :-

செல்வி P. வினோதினி

செல்வி E. சுகிர்தினி

செல்வி P. மயூரவதனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Sivan Nakkai Madam*

தங்கப்பவுண் வியாபாரத்தின் முன்னோடிகளான
சிவன் நகை மாடத்தினர் வித்தகி வீறுநடை போட்டு
வெகு சிறப்பாக வெளிவர
தமது மனமார்ந்த் வாழ்த்துக்களை
தெரிவிக்கின்றனர்.

கே.கே.ஸ்.வீதி,
மல்லாகம்

உரிமையாளர்:-நா.சிவராசா

# வாசகன் வேக்சொப்

அரிசி ஆலை உதிரிப்பாகங்கள் உற்பத்தி விற்பனை
திருத்துதல்
பொறியியல் ஒட்டுவேலைகள் டீசல் இஞ்சின் திருத்துதல்,
லாண்ட் மாஸ்ரர் பெட்டிவேலைகள் கிறில் கேற் வேலைகள்
சகல விதமான வேலைகளும் உரியகாலத்தில் குறைந்த
கட்டணத்தில் செய்து கொடுக்கப்படும்

வித்தகி வீறுநடை போட்டு வெகு சிறப்பாக வெளிவர எமது
வாழ்த்துக்கள்



கே.கே.ஸ் வீதி
மல்லாகம்.

உரிமையாளர்:- என். வாசகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *KAPILAN COMPUTER UINT*

*Computer Classes, Color printing,*

*Photo Mixing, CD Writing*

*Ronio & Book binding*

**கணனி வகுப்புக்கள். கலர்பிறிண்டிங்**

**போட்டோ மிக்சிங், சிடி ரைட்டிங்**

**றோணியோ, புக்வைண்டிங் மற்றும்**

**கணனி பழுதுபார்க்கப்படும்.**

**சகல விதமான வேலைகளும் குறைந்த கட்டணத்தில் உரிய காலத்தில் செய்து கொடுக்கப்படும்.**

**வித்தகி வெகு சிறப்பாக வெளிவர எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்**

**K.K.S. Road, Mallakam.**



# *Auto For Hare*

**குறைந்த கட்டணத்தில் உரிய காலத்தில் உங்கள் போக்குவரத்து தேவைகளை நிறைவேற்ற தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்**

**அ. சிறிசங்கர்**

**அ. சிவகுமார் (அப்பன்)**

**செ. உதயன்**

☞ **தொடர்பு கொள்ளவேண்டியஇடம்**
**கோவில் வீதி. மல்லாகம்.**

**வித்தகி வெகு சிறப்பாக வெளிவர மனமார்ந்த வாழ்த்துக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கை சில்க்ஸ்
8 நவீன சந்தை
சுன்னாகம்

MANGAI SILKS

8 - NEW MARKET, CHUNNAKAM



MUHUNTHAN

Electronice & Fancy

87B ,K.K.S Road
CHUNNAKAM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GOWRY COMMUNICATION
K.K.S Road,
Maruthanarmadam

கௌரி தொலைத்தொடர்பகம்
கே.கே.எஸ் வீதி
மருதனார்மடம்

Tel : 070 -2124227, 0777-741753+
Fax: 071-2124227
Foreign : 0094-70-212427
0094-777-741753

SARANYA MOTORS
221, STANLEY ROAD
JAFFNA

சரண்யா மோட்டார்ஸ்
221, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஜீவன் மோட்டோர்ஸ்

185,ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்.



# செல்வா ஹாட்வெயர்ஸ்

120.ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

# SELVA HARDWARES

120,Stanley Road

Jaffna

T.p. 021- 2873



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா சிறப்புற நல் வாழ்த்துக்கள்

குமரன் பல்பொருள்
வாணிபம்

கே.கே.எஸ் றோட்
மருதனார்மடம்

விழா சிறப்புற நல் வாழ்த்துக்கள்

எரிக் கணேஸ்
ERIC GANESH
Dental & Optical Work

No .80, K.K.S. Road
Chunnkam

Head Office
564,566,Hospital Road
Jaffna
Tele / Fax :2486

விழா சிறப்புற நல் வாழ்த்துக்கள்

ரஞ்சனாஸ் புடவையகம்
இல. 4A மத்திய சந்தை
சுன்னாகம்



RANJANAS TEX
No 4A CENTRAL MARKET
CHUNNAKAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENFIELD WE CHOOS OUR PAINT
# NORTH PROVINCE

## THARMA DISTRIBUTERS AND PAINT DEALERS (PVT) LTD.

**K.K.S ROAD, CHUNNAKAM.**

**TEL : 0777 - 372346**

எமது வடபகுதி கிளை நிறுவனங்கள் மூலம் தரமான நிகரற்ற என்பீல்ட் பெயின்ற் வகைகளைக் கொள்வனவு செய்து, குறைந்த செலவில் நிறைவு செய்யுங்கள்.
கட்டிடப் பெயின்ற் வகைகள், மரத்தளபாட பெயின்ற் வகைகள், உலோக வகைப் பெயின்ற் வகைகள்.
இன்றே உங்கள் பகுதியிலுள்ள எமது கிளை நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு என்பீல்ட் வகைப் பெயின்ற் வகைகளைக் கேட்டு வாங்குங்கள்.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | யாழ் பெயின்ற் காடின் |
| திருநெல்வேலி | கணபதி ஹாட்வெயார் |
| | சக்தி ரேடர்ஸ் |
| | தர்மா ஹாட்வெயார் |
| | தர்சினி ஹாட்வெயார் |
| | நடராஜா அன் சன்ஸ் |
| கோண்டாவில் | சிவா பிறதர்ஸ் |
| உரும்பிராய் | சதா ஹாட்வெயார் |
| நீர்வேலி | மயூரி ஹாட்வெயார் |
| புத்தூர் | விஷ்ணு ஹாட்வெயார் |
| அச்சுவேலி | றதனி ரேடர்ஸ் |
| | தர்சினி எலக்ரிக்கல்ஸ் |
| சாவகச்சேரி | முத்துக்குமரன் ஹாட்வெயார் |
| | ராஜன் ரேடர்ஸ் |
| | பிள்ளையார் ஸ்ரோர்ஸ் |
| | சண்கதிரவன் ஹாட்வெயார் |
| | உதயா ஏஜென்சி |
| கொடிகாமம் | வதனன் ஸ்ரோர்ஸ் |
| நெல்லியடி | கணேசன் ஹாட்வெயார் |
| மந்திகை | மனோகரன் ஹாட்வெயார் |
| பருத்தித்துறை | குமரேஸ் ஹாட்வெயார் |
| சுன்னாகம் | ப.நோ.கூ சங்கம் |
| | சிற்றி பெயின்ற் ஹவுஸ் |
| | அம்பாள் ஹாட்வெயார் |
| | தாஸ் ஹாட்வெயார் |
| | வேல்முகன் ஹாட்வெயார் |
| | ராஜன் பெயின்ற் ஹவுஸ் |
| மருதனார்மடம் | யுனிக்கோன் |
| இணுவில் | விநாயகர் ஹாட்வெயார் |
| கோண்டாவில் | ராஜா ஹாட்வெயார் |
| | ஸ்ரீமுருகன் ஹாட்வெயார் |
| மானிப்பாய் | ராஜன் சுப்பர் மாார்க்கட் |
| | அரவிந்த் ஹாட்வெயார் |
| சங்கானை | நிரஞ்சனாஸ் ஹா[illegible] |
| காரைநகர் | மணியம் ஹாட்வெயார் |
| | கலா ஸ்ரோர்ஸ் |
| | செல்லப்பா ஸ்ரோர்ஸ் |
| | ராஜன் எண்டபிரைசஸ் |

**OLYMPIC INDUSTRIAL COATING (PVT) LTD**
*Factory & office*
*361, Takkawatta, Thanthirimulla,*
*Panadura, Sri Lanka.*
*Tel: 038 - 34379*
*Fax: 038 - 37443*

**THARMA DISTRIBUTERS AND PAINT DEALERS (PVT) LTD.**
**K.K.S ROAD, CHUNNAKAM.**
**TEL : 0777 - 372346**

PRODUCT OF Enfield


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org